விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 28 வியாழக்கிழமை (14.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

### பொதுமக்களின் போராட்டத்தையடுத்து
## காங்கேசன்துறை - கொழும்பு ரயில் சேவைகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

புகையிரதத்துடன் மோதுண்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட களேபரத்தினால் யாழ் - காங்கேசன்துறை மார்க்கத்திலான புகையிரத சேவைகள் நேற்று சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தன.

நேற்றுக் காலை காங்கேசன்துறை - கொழும்பு சேவை



## யாழ்ப்பாணம் - நாவலர் வீதியில் ரயிலுடன் மோ.சைக்கிள் மோதியதில்
### இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நாவலர் வீதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து நேற்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபர் மோதி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார்.

இதனையடுத்து பொது 23



# ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து பணியும் தயார்
## சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

**மேலும் தேர்தல் சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நேற்று ஏற்பாடு செய்திருந்தார்.

பிரசார நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் தேர்தல் சட்டம் மீறப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மகிந்த தேசப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சில தனியார் ஊடகங்கள் சிறந்த வகையில் செயற்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

தேர்தலின் பின்னர் ஊடகங்கள் 23



### மோ.சைக்கிள் விபத்தில்
## படுகாயமடைந்த குடும்பஸ்தர் பலி

(கரணவாய்)

நான்கு நாட்களுக்கு முன்னர் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்ததாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் 23

### கொக்கிளாயில்
## கண்ணிவெடி மீட்பு

(திருகோணமலை)

கொக்கிளாய், அரிசிமலை பகுதியிலிருந்து கண்ணிவெடியொன்று மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த பகுதியில் கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த கண்ணிவெடி மீட்கப்பட்டுள்ளது.

அரிசிமலை பகுதியில் இருந்து மீட்கப்பட்ட இந்த கண்ணிவெடி மேலதிக விசார 23

## செய்தியை திரிபுபடுத்திய சிங்கள பத்திரிகையிடம்
### 1000 கோடி ரூபாய் இழப்பீடு கோரினார் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

தான் சொல்லாத ஒரு செய்தியை வேண்டுமென்றே திரிபுபடுத்தி வெளியிட்ட கோத்தபாய ஆதரவு பத்திரிகையான சிலோன் ருடேயிடம் 1000 கோடி ரூபாய் இழப்பீடு கோரி கடிதம் அனுப்பியுள்ளார் எம்.ஏ. 23

## கடற் பிரதேசத்தில் காற்று அதிகரிக்கும்
### மழையும் பெய்யக்கூடும்

(யாழ்ப்பாணம்)

புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணிக்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடும் என வளி மண்டலவியல் 23

## அரசியல் விளம்பரங்களை காட்சிப்படுத்த வேண்டாம்
### பேஸ்புக் நிறுவனத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

கட்டணம் செலுத்தப்பட்ட அரசியல் விளம்பரங்களை காட்சிப்படுத்த வேண்டாம் என பேஸ்புக் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள காலப் பகுதியில், இவ்வாறு விளம்பரங்களை காட்சிப்படுத்த வேண்டாம் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பப்ரல் கோரிக்கை விடுத்துள்ளது.

• நேற்று நள்ளிரவு 23

### கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில்
## விக்னேஸ்வரன் தலைமை என விழித்த செல்வம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த சஜித் ஆதரவு பிர, சாரக் கூட்டத்தில் முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை நிகழ்வின் தலைமை என ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் விழித்துப் பேசினார்.

நல்லூர் கிட்டுப்பூங்காவில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரசாரக் கூட்டத்திலே அவர் இவ்வாறு பெயர் மாறிப் பேசியி 23

### காலையே சென்று வாக்களியுங்கள்
## பொது இடங்களை அரசியல் களமாக பயன்படுத்த வேண்டாம்
### பப்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

காலையிலேயே சென்று வாக்களியுங்கள். பொது இடங்களை அரசியல் களமாக பயன்படுத்த வேண்டாம் என்றும் மத வழிபாடுகள் எனும் போர்வையில் மறைமுகமாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட வேண்டாம் என்றும் தெரிவித்தார் பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி.

பப்ரல் அமைப்பின் 23

# காணவில்லை



ஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டையை சேர்ந்த **திருமதி மகேந்திரன் யசோதா** என்பவரை 11.11.2019 காலை 10.00 மணியிலிருந்து காணவில்லை. இவரைப்பற்றிய தகவல் தெரிந்தால் தயவு செய்து கீழே தரப்பட்ட தொலை பேசி இலக்கத்திற்கு அறியத்தரவும்.

**தொலைபேசி இலக்கம் -**
**076 4664404**
**தகவல் - மகன் (ம.இந்துஜன்)** (966)

# மரண அறிவித்தல்

## திருமதி உருத்திராதேவி செல்லக்கண்டு



மணற்பகுதி புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உருத்திராதேவி செல்லக்கண்டு அவர்கள் 13.11.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய புத்திரியும் காலஞ்சென்றவர்களான வேலன் - சீதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் வேலன் செல்லக்கண்டுவின் அன்பு மனைவியும் மாணிக்கம் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செல்லையா, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியும் அப்புலிங்கம், கனகம்மா, காலஞ்சென்றவர்களான கதிரன், பார்வதி, இளையபிள்ளை, பூபதி ஆகியோரின் மைத்துனியும் வனஸ்பதி, சசிகலா, சதீஸ்குமார் (பயிற்றுநர் - விளையாட்டுத் திணைக்களம் வட மாகாணம்), ராஜ்குமார் (சுவிஸ்), தாரணி ஆகியோரின் பாசமிகு தாயரும் பஞ்சாட்சரம் (ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர் ப.நோ.கூ.சங்கம்) சிவபாலன் மாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கால்நடைகள் திணைக்களம் வட மாகாணம்), சுகிர்தா, ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும், திருமாறன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் பருத்தித்துறை), சுரேன் (ஆசிரியர் - செட்டிகுளம் மகா வித்தியாலயம்), பிரவீன், டினோஜ், சதுர்ஜன் (விளையாட்டு பயிற்றுநர் - யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்), சாகிர்யன், சாரங்கி (ஆசிரியை - மட்டக்களப்பு விபுலானந்தா கல்லூரி), சரத்ராஜ், துஷாரகன் (அபான்ஸ் சுன்னாகம்), லக்ஷகன் (பொலிஸ் உத்தியோகத்தர்), துஷானி, வினோஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கௌடுது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**மணற்பகுதி, புத்தூர், யாழ்ப்பாணம்.** (C-8221) **தகவல் - குடும்பத்தினர்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இவ்வருடம் நடைபெற்ற தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டியில் தரம் 4 ஐச் சேர்ந்த எமது பாடசாலை மாணவி

**செல்வி மனஸ்வினி சிவகாந்தன்**

அவர்கள் Recitation நிகழ்வில் பங்குபற்றி முதலிடம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். (C-8220)

**பாடசாலைச் சமூகம் - யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில்.**

## ஜனாதிபதித் தேர்தல் அன்று

# யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக் எவையும் நடைபெறாது

### பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் அன்று (சனிக்கிழமை) யாழ். போதனா வைத்தியசாலையில் கிளினிக் எவையும் நடைபெறமாட்டாது என யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்

அன்றையதினம் கிளினிக் பகுதியில் நடைபெறும் இரத்தப் பரிசோதனைகள் யாவும் பிறிதோர் தினத்தில் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் 250 இற்கும் மேற்பட்ட தாதிய உத்தி யோகத்தர்கள் ஜனாதிபதித் தேர் தலில் வாக்களிப்பதற்காக வெளி மாவட்டத்துக்குச் செல்ல வுள்ளதால் தேர்தலை அண் மித்த நாள்களில் சிகிச்சையை வழங்குவதில் நெருக்கடி நிலை காணப்படுகிறது.

மேலும் அவசர சிகிச்சைப் பிரிவும் உள்ளகவிடுதிகளுக்கு நோயாளிகளை அனுமதிப் பதும் வழமைபோல் நடை பெறும் என தெரிவித்துள் ளார். (ம-3)

## ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன்

### பதவி விலகுவேன் - மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் நிறை வடைந்தவுடன் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது குறித்து கருத்து வெளியிட் டுள்ள அவர், ஜனாதிபதித் தேர்த லுக்குப் பின்னர் மற்றொரு தேர் தலை நடத்துவதற்கு தான் தலைமை தாங்கப்போவதில்லை என்ற முடிவை இரண்டு மாதங்களுக்கு முன்னரே எடுத்துள்ளதாக குறிப் பிட்டார். (ம-3)

# சாதனை மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வன் அமினதாஸ் டெரன்ஸ்**

மு/விசுவமடு மகாவித்தியாலயத்தில் 2018 இல் சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற புத்தாக்கப்போட்டியில் வெள்ளிப்பதக்கத்தைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த **செல்வன் அமினதாஸ் டெரன்ஸ்** என்பவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**செல்வி காந்தரூபன் லுகேந்தினி**

மு/ விசுவமடு மகாவித்தியாலயத்தில் 2018 இல் தேசிய மட்ட சமூகவிஞ்ஞான போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த **செல்வி காந்தரூபன் லுகேந்தினி** அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**செல்வன் தவராசா லக்ஸன்**

மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் 2018 இல் உயர்தரப் பிரிவில் தேசிய மட்ட கணித வினாடிவினாப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த **செல்வன் தவராசா லக்ஸன்** அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம், மு/விசுவமடு ம.வி**

**Home Visiting Classess**

Study ACCA (Knowledge Level) With Low Cost. Study Material + Revision Kit Free

**Contact - 077 531 7063** (959)

# பதவி வெற்றிடம்

திட்ட முகாமையாளர், களப்பணியாளர்கள், ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

மின்னஞ்சல் : senthu@eureka.lk

முடிவுத் திகதி : 25.11.2019

(C-8225)



## 20 மில்லியன் ரூபா பெறுமதியான

# தங்கக் கட்டிகளுடன் உக்ரேய்ன் பெண் கைது

### காலில் கட்டி கடத்த முற்பட்டவர் அகப்பட்டார்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உக்ரேய்ன் நாட்டுப் பெண் ஒருவர் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கக் கட்டிகளுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண் 2 கிலோ 320 கிராம் நிறையுடைய தங்க பிஸ்கட்டுக்களை தனது காலில் கட்டி இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளதாக விமான நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவிலிருந்து குறித்த பெண் இலங்கை வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)


# வட இலங்கைச் சங்கீத சபை
# யாழ்ப்பாணம்

## எழுத்துப் பரீட்சை/ செய்முறைப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோருதல் – 2020

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2020 ஆம் ஆண்டு மார்ச்/ஏப்ரில் மாதத்தில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் இவ் விளம்பரத்தின் ஊடாகக் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களைத் தபால் **மூலமாக மட்டுமே** பெற்றுக் கொள்ள முடியும். தரம் 1, 2, 3, 4, 5, 6 ஆகிய அனைத்துப் பரீட்சைகளுக்குமான விண்ணப்பப்படிவங்களும் இவ்வாறு தபால் **மூலமாக மட்டுமே** விநியோகிக்கப்படும்.

2. தபாற் செலவு, விண்ணப்பப்படிவம், பணம் செலுத்தும் பற்றுச் சீட்டு, மற்றும் அறிவுறுத்தல்கள் உள்ளடங்கலாக **250/-** வினைக் கீழ்க் குறிப்பிட்டவாறு வங்கியில் வைப்புச் செய்து வங்கியினால் வழங்கப்படும் வைப்புச் சீட்டினையும், சுய முகவரி எழுதப்பட்ட (ஆங்கிலத்தில் தெளிவான எழுத்துக்களில்) 9 × 6 அளவுடைய கடித உறையினையும் இணைத்து **30.11.2019 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.**
   - கணக்கு : **தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை**
   - கணக்கு இலக்கம் : **1090654**
   - வங்கி : **இலங்கை வங்கி**

3. எக்காரணம் கொண்டும் விண்ணப்பப்படிவங்கள் வட இலங்கைச் சங்கீத சபைக் காரியாலயத்திலோ அல்லது வேறு இடங்களிலோ நேரடியாகப் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியாது.

4. **விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் தொடர்பான அறிவுறுத்தல்கள்.**
   - **எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் :**
     கர்நாடக சங்கீதம், பரதம், மிருதங்கம், பண்ணிசை, நாடகமும் அரங்கியலும்.
   - **செய்முறைப் பரீட்சைக்கான பாடங்கள் :**
     கர்நாடக சங்கீதம், வீணை, வயலின், ஹார்மோனியம், புல்லாங்குழல், பரதம், மிருதங்கம், பண்ணிசை, நாடகமும் அரங்கியலும்.
   - சங்கீதம் அதனோடு தொடர்புடைய வயலின், மற்றும் வீணை, புல்லாங்குழல், ஹார்மோனியம், பரதம், மிருதங்கம், பண்ணிசை, நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களில் யாதேனும் ஒரு தரத்துக்கு மாத்திரம் தோற்ற முடியும்.
   - எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகிய இரண்டினையும் ஒரே கல்வி ஆண்டுக்குள் (ஒரே தடவையில்) பூர்த்தி செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் செய்முறைப் பரீட்சை ஒரு ஆண்டிலும் எழுத்துப் பரீட்சை மற்றுமொரு ஆண்டிலும் தோற்றுவதற்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**குறிப்பு :**

தரம் 1,2,3,4,5,6 ஆகிய ஒவ்வொன்றுக்கும் உரிய **பரீட்சை விதிமுறைகள்** மற்றும் **பரீட்சைக் கட்டணங்கள்** தொடர்பான பூரண விபரங்கள் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

**தலைவர்**
**வட இலங்கைச் சங்கீத சபை**
**கே.கே.எஸ் வீதி,**
**மருதனார்மடம், சுன்னாகம்**

செல்வரட்ணம் சந்திரராஜா
யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்.
தலைவர்,
வட இலங்கைச் சங்கீத சபை – யாழ்ப்பாணம்.

(C-8216)


## வெள்ளவத்தையில் பாரிய தீ விபத்து

### கடைகள் எரிந்து நாசம்



(கொழும்பு)

வெள்ளவத்தையில் பாரிய தீ விபத்து காரணமாக இரு கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பிரபல ஆடை விற்பனை நிறுவனமான நோலிமிட்டிற்கு அருகாமையில் நேற்றுக் காலை இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

தீ பரவலுக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## வீதியில் சென்ற கார் திடீரென தீப்பிடித்தது



(கிரிந்திவெல)


கிரிந்திவெல, தொம்பே பகுதியிலுள்ள நூலகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை காரொன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது.

இதன்போது குறித்த காரில் பயணித்த கணவனும் மனைவியும், அவர்களது குழந்தையும் எவ்வித காயங்களுமின்றி பாதுகாப்பாக வெளியேறினர்.

இதன் பின்னர் பிரதேச வாசிகளின் உதவியால் தீப்பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

நுவரெலியாவிலிருந்து ரதாவானை நோக்கிப் பயணித்த காரொன்றே இவ்வாறு அனர்த்தத்திற்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணியிலிருந்து கழற்றி விடப்படவுள்ள வீரர்கள்



2020 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டிக்கான ஏலம் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் நிலையில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இருந்து 3 முக்கிய வீரர்கள் நீக்கப்பட உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு முழுமையான அளவில் வீரர்கள் ஏலம் நடைபெற உள்ளதால், 2020 ஆம் ஆண்டுக்கான ஏலத்தில் வீரர்களில் சிறிய அளவில்தான் மாற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், எந்த வீரர்களை தக்கவைப்பது, ஏலத்துக்கு அனுப்புவது குறித்த பட்டியலை ஐ.பி.எல் நிர்வாகத் திடம் தெரிவிக்க இன்று கடைசி திகதியாகும்.

அந்த வகையில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இருந்து அம்பதி ராயுடு, கேதார் ஜாதவ், முரளி விஜய் ஆகியோரை கழற்றிவிட்டு அதற்கு மாற்றாக 3 வீரர்களைச் சேர்க்க அணி நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதவிர பந்துவீச்சாளர்களில் சர்துல் தாகூர், கரன் சர்மா ஆகியோரும் நீக்கப்படுவார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மரண அறிவித்தல்

## துரைசிங்கம் பாலசிங்கம்

(விற்பனை முகாமையாளர் ப.நோ.கூ. சங்கம், சுன்னாகம்)



சுன்னாகம் கிழக்கு , சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோவிலடி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பாலசிங்கம் (விற்பனை முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சுன்னாகம்) நேற்று (13.11.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம்-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பூரணம் தம்பதிகளின் மருமகனும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வராசா(ஜேர்மன்) , ஜெயராஜசிங்கம் (சுவிஸ்) , மல்லிகாதேவி மற்றும் தவராஜசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரேம்குமார் (பிரான்ஸ்), சுரேஸ்குமார்(முகாமைத்துவ உதவியாளர்-மாநகரசபை, யாழ்ப்பாணம்,உறுப்பினர்-வலி.தெற்கு பிரதேசசபை,சுன்னாகம்), தினேஸ்குமார்(லண்டன்) ஜினேஸ்குமார்(குட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னா, அருந்தவக்குமார், மாலினி, ராஜினி ஆகியோரின் மைத்துனரும், ஜனதுர்க்கா (பிரான்ஸ்), நிறோசா, றாதா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் டவனியா, டருஷா (பிரான்ஸ்), பிரகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.11.2019) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
சுன்னாகம்

(C-8223)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## துரையப்பா மயில்வாகனம்

பிறப்பு
16.11.1944

இறப்பு
12.11.2019

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா மயில்வாகனம் 12.11.2019 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கயிலாயர்-முத்துப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பத்மாவதியின் அன்புக்கணவரும் ஜெயானந்தி(லண்டன்), கிருஷ்ணானந்தன்(சுபாஸ்-கனடா), கிருபானந்தன்(கிரி-லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் இன்பகரன் (லண்டன்), பத்மகோபிதா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பூமிகா, யாகவி, அட்சயா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் , அருந்தவதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லம்மா, பொன்னுத்துரை, இரத்தினம், இராசரத்தினம், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.11.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(967)

"பத்ம வாசா" புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு,சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# ஐ.நா. அமைதிப்படையில் இணைய மாலிக்கு புறப்பட்டது இலங்கை இராணுவ அணி!

(கொழும்பு)

மாலியில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையணியில் இணைந்து கொள்ள, 243 இராணுவ வீரர்கள் அடங்கிய இலங்கை இராணுவ அணி நேற்று புதன் கிழமை காலை புறப்பட்டுச் சென்றது.

விஜயபாஹு காலாட்படைப் படைப்பிரிவின் 20 அதிகாரிகளும், 203 மருத்துவ, பொறியியல் மற்றும் சிப்பாய்கள், அதிகாரிகள் அடங்கிய 223 பேரைக் கொண்ட குழுவே பயணமானது.

இவர்களுக்கர்க எதியோப்பியன் விமான நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் 767-300 விமானத்தை ஐக்கிய நாடுகள் சபை ஒதுக்கியிருந்தது.

அதற்கமைய கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இலங்கை இராணுவ அணியினரை ஏற்றிக்கொண்டு நேற்று அதிகாலை 3.20 மணியளவில் விமானம் புறப்பட்டது.

அமைதிப்படையில் இணையும் இராணுவ அணியை வழியனுப்பும் நிகழ்வில் இராணுவத் தளபதி, லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-7)










# முகவராண்மை: ஒரு புதிய பரிமாணம்

**"முதல்வர் என விபரிக்கப்படும் முதலாம் நபரையும் மூன்றாம் நபரையும் செயலொன்றினை நிறைவேற்றுவது தொடர்பான பிரதிநிதித்துவ ஒப்பந்த உறவு முறையில் முதல்வர் சார்பாக இணைத்து வைக்கும் ஆள் ஒருவருக்கும் முதல்வருக்குமிடையில்ஏற்படும் நம்பக ரீதியான ஒப்பந்த உறவுமுறையே "முகவராண்மை" என வரைவிலக்கணப் படுத்தப்பட முடியும்.**

"நம்பகரீதியான" எனும் சொற்பிரயோகத்துடன் "ஒப்பந்த" எனும் சொற்பிரயோகம் ஏன் பாவிக்கப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும். பொதுவாக பெரும்பாலான சட்டவல்லுநர்களால் முகவர் ஒருவர் சிற்றக்கவையராக அல்லது வகையற்றவராக இருக்கலாம் என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்படு கிறது. இதன் பிரகாரம் முதல்வருடன் நம்பக உறவினைக் கொண்டிருக்கும் முகவர் ஒப்பந்தம் சார் தகை மையற்றவராக இருக்கலாம். ஆனால் அத்தகைய முகவரை முதல்வர் சட்ட ரீதியான பொறுப்புக்குள்ளாக்க வேண்டுமானால் முகவர் ஒப்பந்தம் சார் தகைமையுடையவராக இருக்க வேண்டும். இதேபோன்று உறுதிப்படுத்தல் மூலம் முகவராண்மையில் (Ratification) முகவர் அதிகாரம் கடந்து மூன்றாம் நபரோடு செய்த ஒப்பந்தத்தை முதல்வர் உறுதிப்படுத்த மறுக்கும் சந்தர்ப்பத்தில் முகவரே மூன்றாம் நபருக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாகும் நிலை உருவாகிறது. இத்தகையதொரு நிலையே தீங்கியலைப் பொறுத்தவரையிலும் முகவர் மூன்றாம் நபருக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புக்குள்ளாக்கப்படுகிறார். மேற்கூறப்பட்ட விடங்களில் முகவரின் சட்டரீதியான அந்தஸ்து என்ன என்பது விடை காணப்பட வேண்டிய விடயமாக இருக்கிறது.

**சம்மதம்**

முகவராண்மையில் சம்மதம் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. வலிதான ஒப்பந்தமொன்று உருவாகுவதற்கு எட்டு அல்லது ஒன்பது அடிப்படை மூலாதாரங்கள் இருக்க வேண்டியது தவிர்க்கப்பட முடியாததொன்றாகும். அத்தகைய மூலாதாரங்களில் சம்மதமும் ஒன்றாகும். சம்மதம் எனும் மூலாதாரத்திற்கு ஏனைய மூலாதாரங்களை விட மேலதிக முக்கியத்துவம் கொடுக்க முற்படும்போது பல கருத்து முரண்பாடுகள் எழுவதற்கு சந்தர்ப்பங்கள் நிறையவே இருக்கின்றன. உதாரணமாக முகவராண்மையில் ஈடுபடும் தரப்பினரின் அறிவிற்கு அப்பால் ஏதாவது பிறழ்பகர்வு ஒன்றின் அடிப்படையில் ஒருவர் இன்னொருவருக்கு அவர் சார்பாக செயலாற்றுவதற்கு சம்மதம் தெரிவிப்பாரானால் அங்கு முகவராண்மை ஒன்று உருவாகுமா? மேலும் சில சட்ட வல்லுநர்களின் அபிப்பிராயப்படி அவசிய தேவைக்கான முகவராண்மையில் (Agency of necessity) முதல்வருக்கும் முகவருக்குமிடையில் தொடர்புகள் எதுவும் அற்ற நிலையில் முதல்வரின் சம்மதம் முகவருக்கு கொடுக்கப்பட முடியாது என்பதே அவர்களின் கருத்தாகும். இருப்பினும் சம்மதம் வெளிப்படையாகவும் உட்கிடையாகவும் உருவாக்கம் பெற சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணமாக: விபத்தில் சிக்கி, சுயநினைவற்ற நிலையில் உயிருக்காக போராடும் விபத்திற்குள்ளான ஒருவர் மருத்துவமனையில் சத்திரசிகிச்சை கூடத்தில் அவசர சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்படும் போது சத்திரசிகிச்சைக்கான சம்மதத்தை அந்த நபரிடமிருந்து மருத்துவமனை நிர்வாகம் பெற முடியுமா? அங்கு விபத்திற்குட்டபட்வரின் சம்மதமானது அவரின் அவசர சத்திர சிகிச்சைக்கு உட்கிடையாகவே இருக்கும். மேலும் உறுதிப்படுத்தல் முகவராண்மையரில் முகவர் மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்யும் போது முதல்வருக்கும் முகவருக்குமிடையில் சம்மதம் எனும் விடயம் உருவாகியிருக்க முடியாது.

**கட்டுப்பாடு**

முதல்வரின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு செயற்படவேண்டியவரே முகவராவர் என்ற கருத்து வலுப்பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் முதல்வரின் கட்டுப்பாடு என்பது பின்வரும் சந்தர்ப்பங்களில் வினாவிற்குரிய விடயமாக அமைகிறது.

(அ) அவசிய தேவைக்கான முகவராண்மை (ஆ) உறுதிப்படுத்தல் மூலம் முகவராண்மை

**தகைமை**

முதல்வர், முகவர், மூன்றாம்நபர் ஆகிய மூவரும் ஒப்பந்தம்செய்யும் தகைமையுடைவர்களாக இருத்தல் வேண்டும். காரணம்: தீங்கியல் போன்ற பலவிடயங்களில் முகவர் தனிப்பட்ட பொறுப்பு என்ற நிலையிருக்கும் போது குறிப்பிட்ட சிற்றக்கவையர் எனும் முகவர் மீது வழக்கிடும் உரிமை திறந்தவர்களுக்கு இருக்குமா? என்பதே விடை காணப்படவேண்டியதொரு விடயமாகும். மேலும் முகவரானவர் தனது செயலினால் எழும் முழுப்பொறுப்புக்களையும் முதல்வர் பொறுப்பேற்று விட்டால் அவர் முகவர் என்ற அந்தஸ்திலும், பொறுப்புக்களை நியாயமான முறையில் முதல்வர் ஏற்கத் தவறும் சந்தர்ப்பத்தில் முகவரானவர் முகவராண்மையில் ஒப்பந்தம் சார் கட்சிக்காரராகவும் மாறும் நிலையும் ஏற்படுகிறது.

உதாரணம்: (அ) அவசிய தேவைக்கான முகவராண்மை

(ஆ) உறுதிப்படுத்தல் மூலம் முகவராண்மை.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை உற்று நோக்கினால் முகவரானவர் "இரட்டைத் தன்மை தகைமை" உடையவராக இருக்கும் ஒரு சிறப்பம்சத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. **முகவராண்மையின் வகுப்பாக்கம்!** முகவராண்மை மூன்று வகையான வகுப்பாக்கம் கொண்டதாக வகைப்படுத்தப்படலாம்.

(அ) யூனிவேஸல் (Universal) (ஆ) பொதுவானது (இ) விசேடமானது

யூனிவேஸல் முகவராண்மையில் முகவரிடம் முதல்வர் சார்பாக செயலாற்றுவதற்கு முதல்வரால் முழுப்பொறுப்புக்களும் அதிகாரத் தத்துவப் பத்திர மூலம் கையளிக்கப்பட்டிருக்கும். முதல்வர் ஒரு பெயரளவான அதிகாரமுடையவராக இருப்பார். பொதுவான முகவராண்மையைப் பொறுத்தவரையில், முதல்வர் பல்வேறு வேலைத்தொகுதியை உடையவராக இருப்பார். இவ்வேலைத் தொகுதியில் சகல விடயங்களையும் உள்ளடக்கிய குறிப்பிட்டதொரு வேலைப்பகுதியை ஒதுக்கி அதனை முற்றுமுழுவதாக செயற்படுத்துமாறு முகவரிடம் ஒப்படைக்கிறார். இதனை முகவரிடம் ஒப்படைப்பதன் நோக்கம் முதல்வருக்கு அவ்வேலைப்பகுதியை செயற்படுத்தக்கூடிய தகைமை இல்லாதிருப்பதல்ல. தகைமை இருந்தும் வேலைப்பளு காரணமாக நிர்வாக ரீதியான சிக்கல் ஏற்படக்கூடிய சூழ்நிலை காரணமாகவே முகவரிடம் அவ்வேலைத்திட்டத்தினை செயற்படுத்துமாறு முதல்வர் ஒப்படைக்கின்றார். மேலும் யூனிவேஸல் (Universal) முகவராண்மையில் முதல்வரின் எல்லா விடயங்களையும் செயற்படுத்துவதற்கு பிரதிநிதித்துவ அதிகாரத்துவப்பத்திரம் முதல்வரால் முகவருக்கு வழங்கப்படுகிறது என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. அப்படியானால் அத்தகைய பத்திரம் முதல்வரின் அசையும் சொத்துக்களுக்கும் உபயோகப்படுத்தப்பட முடியுமா?

**முகவராண்மை ஒப்பந்த உறவு முறையின் வகைகள்**

முகவராண்மை உருவாக்கம் ஏற்படும் போது மூன்று வகையான ஒப்பந்த உறவு முறை சம்பந்தப்பட்டவர்களுக்கிடையில் ஏற்படுவது தவிர்க்க முடியாதததும் அவசியமுமாகின்றது.

(அ) முதல்வருக்கும் மூன்றாம் நபருக்குமிடையில் ஏற்படுவது (பிரதிநிதித்துவ ஒப்பந்த உறவுமுறை)

(ஆ) முதல்வருக்கும் முகவருக்குமிடையில் ஏற்படுவது (நம்பகரீதியான ஒப்பந்த உறவுமுறை)

(இ) முகவருக்கும் மூன்றாம் நபருக்குமிடையில் ஏற்படுவது (இணை ஒப்பந்தத்தின் உறவுமுறை)

**முகவராண்மை உருவாக்கம் பெறும் வகைகள்**

முதல்வர் ஒருவர் தன் சார்பாக செயலொன்றினை நிறைவேற்றுதல் தொடர்பில் முகவர் ஒருவரை வெறுமனே நியமனம் செய்து விடுவதனால் மட்டும் முகவராண்மை ஒன்று உருவாக்கம் பெற்று விட முடியாது. அப்படியானால் எப்பொழுது முகவராண்மை ஒன்று உருவாக்கம் பெறும்? முதல்வருக்கும் மூன்றாம் நபருக்குமிடையில் பிரதிநிதித்துவ ஒப்பந்த உறவு ஒன்று ஏற்பட்ட அதே கணத்தில் முதல்வருக்கும் முகவருக்குமிடையில் "முகவராண்மை" ஒன்று உருவாகும். முகவராண்மை வெளிப்படையாகவும், உட்கிடையாகவும், அல்லது வெளிப்படையாகவும் உட்கிடையாகவும் உருவாக்கம் பெறலாம்.

(அ) முகவராண்மை வெளிப்படையாக பின்வரும் வழிகளில் உருவாகலாம்.

1.வாய்மொழி மூலம் 2. எழுத்து மூலம்

(ஆ) முகவராண்மை உட்கிடையாக பின்வரும் வழிகளில் உருவாகலாம்.

1. ஊகித்தல் மூலம் (PRESUMED) 2. தோற்றமளித்தல் மூலம் (APPARENT)

(C-8209)

மேற்கூறப்பட்ட உட்கிடையான உருவாக்கமானது முகவராண்மையில் சம்பந்தப்பட்டவர்களின் நடத்தை மூலமாகவே அமையப்பெறும். ஊகிக்கும் முகவராண்மையும் தோற்றமளிக்கும் முகவராண்மையும் வெளிப்புறத்தில் ஒரே மாதிரியான நிலைப்பாட்டைக் கொண்டதாக காட்சியளிப்பினும் ஊகித்தல் முக வராண்மையில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே இருக்கும் உகந்த கூட்டு உறவுமுறை வேறு எங்கும் இருக்க முடியாது. மேலும் கூறுவதானால் கடைக்காரனுக்கு வாடிக்கையாளரின் மனைவியை தனது வியாபார நிறுவன வாசலிலே கண்டதும் ஊகிக்கும் முகவராண்மை தன்னியக்கமாக உருவாகி விடும்.

(இ) முகவராண்மை வெளிப்படையாகவும் உட்கிடையாகவும் பின்வரும் வழிமுறையில் உருவாகும். உதாரணம்: அவசிய தேவைக்கான முகவராண்மை.

**அவசிய தேவைக்கான முகவராண்மை**

அவசிய தேவைக்கான முகவராண்மை ஒன்று உருவாகுவதற்கு நான்கு மூலாதாரங்கள் (நிபந்தனைகள்) பூரணப்படுத்தப்பட வேண்டும்.

(அ) உண்மையான அவசிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவெனில் முதல்வரிடமிருந்து முகவர் எதுவித தகவலும் பெற முடியாத சூழ்நிலை இருத்தல் வேண்டும்.

(ஆ) பின்னைய செயலானது முன்னைய செயலுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

(இ) உண்மையான வர்த்தக தேவைப்பாடு ஒன்று இருந்திருத்தல் வேண்டும்.

(ஈ) முகவராவனவர் எல்லோருடைய நன்மைக்காகவும் செயற்பட வேண்டும்.

முன்னைய செயலுடன்தொடர்புடையதாக பின்னைய செயல்இருக்க வேண்டும்என்பது பின்வருமாறு விபரிக்கப்படலாம். புகையிரதத்தில் பயணத்தை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்ட பயணியானவர் புகையி ரதத்தில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது அவருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு புகையிரதத் திணைக்களம் பொறுப்புடையதாகும். ஆனால் புகையிரத நிலையத்தில் பயண சீட்டைப் பெறுவதற்காக வரிசையில் நின்று கொண்டிருக்கும் நபர் ஒருவருக்கு ஏதாவது அசௌகரியம் ஏற்பட்டால் அதற்கு புகையிரதத் திணைக்களம் பொறுப்பல்ல. இங்கு முன்னைய செயலானது புகையிரதத்தில் பயணம் செய்வதற்காக புகையிரதத் திணைக்களத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். பின்னைய செயலானது புகையிரதத்தில் பயணத்தை மேற்கொண்ட பயணிக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள்.

**உறுதிப்படுத்தல் மூலம் முகவராண்மை**

முகவர் தனது அதிகாரத்திற்கு அப்பால் மூன்றாம் நபரோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை முதல்வர் உறுதிப்படுத்தும் போது எழும் தேவைப்பாடுகளில் ஒன்றாக முகவர் ஒப்பந்தம் செய்த நாளிலும் முதல்வர் அந்த ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் நாளிலும் முதல்வர் ஒப்பந்தம் செய்யும் தகைமையுடையவராக இருத்தல் வேண்டும். காரணம் உறுதிப்படுத்தப்படும் ஒப்பந்தமானது முகவர் ஒப்பந்தம் செய்த நாள் வரைக்கும் பின்னோக்கி வலுவுடையதாக செயற்படுவதே நிலைமையாகும். அப்படியானால் மேற்குறிப்பிட்ட இரு நாட்களுக்கும் (திகதிகள்) இடையில் முதல்வர் சட்டத் தகைமை இழந்த நிலையில் இருப்பாரானால் உறுதிப்படுத்திய ஒப்பந்தத்தின் சட்ட அந்தஸ்து எதுவாக அமையும்?

**முகவராண்மை முடிவுறுத்தல்**

முகவராண்மையானது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் முடிவுறுத்தப்படலாம். இவற்றுள் முதல்வர், முகவர்'இறப்புக்களும் முடிவுறும் காரணங்களுள் ஒன்றாகும். எது எவ்வாறாறிருப்பினும் தரகுப்பணம் அடிப்படையில் முகவர் நியமனம் நடைபெறும் போது மூன்றாந்தரப்பினர் இறந்து விடுவாரானால் முகவராண்மை நிலை எதுவாக இருக்கும். மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவற்றையும் தொகுத்து நோக்குமிடத்து ஒப்பந்த சட்டத்தில் உலகமயமாக்கல் எனும் வர்த்தகத்துறையில் "முகவராண்மை" எனும் நிலைப்பாடு புதிய, புதிய கோணங்களில் தனது ஸ்திரத்தன்மையை செலுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆக்கம். எஸ்.ஆர்.சோதிநாதன், பகுதிநேர சட்ட விரிவுரையாளர், தொழில் நுட்பவியல் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8209)

அர்ப்பணம்-மறைந்த வி.என்.நவரட்ணம் அவர்களுக்கு (நியாய துரந்தர்) சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர். (தென்கிழக்கு ஆசியா)

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

## உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட ஜோதிடம்

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி மீனம் ஆகும். மீனத்தின் அதிபதி குரு ஆவார். அதன் சின்னம் மீன் ஆகும். உத்திரட்டாதி நட்சத்திரத்தின் அதிபதி சனி ஆவார். அதன் சின்னம் பசு ஆகும். எனவே இவர்கள் நேர்மையாகவும் நல்ல புத்திசாலியாகவும் ஓரளவு தர்மசிந்தனையுடையவர்களாகவும் இருப்பர்.

ஓரளவு சாந்த குணமுண்டு. ஏழைகளிடம் இரக்கம் காட்டி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய சுபாவமும் இவர்களிடம் உண்டு. இடை இடையே சோம்பேறித்தனம், மந்தபுத்தி, மூர்க்கக் குணம் முதலியன வந்து மறையும்.

இவர்கள் தனது குழந்தைகள் மீது அதிக பாசமாக இருப்பார்கள். சகோதர பாசம் சுமாராக இருக்கும். தாய்ப்பாசம் சுமாராக இருக்கும். ஆனால் தந்தை பாசம் அதிகமாக இருக்கக்கூடும். மனைவி பாசம் சற்று குறைவாகவே இருக்கக் கூடும். இதனால் இல்வாழ்வில் அவ்வப்போது சிறு, சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலக இடமுண்டு.

கல்வியிலும் கலையிலும் இவர்கள் கெட்டிக்காரர்களாக திகழ்வார்கள். உயர்பட்டம் பெற்று உயர்ந்த உத்தியோகத்தில் அமரும் யோகமும் உண்டு.

இனிப்பு மளிக்கைக் கடை, தங்கம், கலைத்தொழில், ஜோதிடம், நடிப்பு, டைரக்சன் சம்பந்தமான தொழிலை சிலர் செய்ய நேரிடும்!

சிலர் மனேஜர், சுப்பர்வைசர், கேஷியர், ஆசிரியர் போன்ற பதவிகளில் அமர இடமுண்டு.

இவர்கள் தோள்பட்டை வலி, அஜீரணக் கோளாறு போன்றவற்றால் அவதியுறு நேரலாம்.

# பொதுமன்னிப்பு கோரி 3ஆவது நாளாகவும் கைதிகள் போராட்டம்



(கொழும்பு)

பொதுமன்னிப்பு கோரி 3 ஆவது நாளாகவும் வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள மரண தண்டனைக் கைதிகள் சிலர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இவர்கள், சிறைச்சாலையின் கூரை மீது ஏறி தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ரோயல் பாக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமையையடுத்தே இவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ரோயல் பாக் கொலையுடன் தொடர்புடையவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பை வழங்கியது போன்று தங்களுக்கும் பொது மன்னிப்பை வழங்க வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

இரண்டு கைதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நேற்று வரை நான்கு கைதிகள் இணைந்துள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

## நாவற்குழியில் நவக்கிரகபிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை ஸ்ரீ சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் நவக்கிரஹ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை நடைபெறும். இன்று 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதலும் நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 9.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். (இ-5)

# ஆள்மாறாட்டம் இடம்பெறவில்லை அணிமாறி விளையாடுவது வழமை

## கணக்காளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரி-சங்குநாதத்தில் (10.11.2019) "ஆலடி மாநாடு" பகுதியில் விளையாட்டுப்போட்டியில் நடந்த ஆள் மாறாட்டத்தைப் பார்த்தியளோ" எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான தேசிய ரீதியான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர்பில் மாவட்டச் செயலகம் சாராத உத்தியோகத்தர் விளையாடியதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த திணைக்களம் சாராத உத்தியோகத்தர்கள் அனைத்து அணிகளிலும் மாறி மாறி விளையாடி வருகின்றமை வழமையாகும்.

2012 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட செயலக அணி ஆசிரிய அணிக்காக விளையாடியமையும் குறிப்பிடத்தக்கது. கணக்காளராகப் பணிபுரியும் நானும் முன்னைய வருடங்களில் (2015, 2016, 2017) ஆசிரியர்களின் அணிக்கு தலைமை தாங்கி விளையாடி இருந்தேன்.

மேலும் யாழ்.மாவட்ட செயலக அணி தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான சம்பவம் எதுவும் இடம் பெற்றிருக்கவில்லை என்பதுடன் அணியின் முகாமையாளராகவும் தலைவராகவும் செயற்பட்ட நான் அனைத்து வீரர்களுடனும் கலந்தாலோசித்து இரண்டு அணிகளும் எமது மாவட்டத்தை சார்ந்ததனால் நாங்களாகவே போட்டியிலிருந்து வினயத்துடன் விலகியிருந்தோம். அதன் பின்னர் நடைபெற்ற கலப்பு அணி போட்டியில் நாம் ஆசிரிய அணியுடன் விளையாடி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகி விளையாடியமையையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மேற்படி விடயம் தொடர்பில் அரசாங்க அதிபர் எந்த விதத்திலும் தொடர்புபட்டிருக்கவில்லை. இவ் அனைத்து விடயத்திற்குமான பொறுப்பு என்னையே சாரும் என யாழ்ப்பாணம் பிரதேச செயலக கணக்காளர் எஸ்.அகிலன் விளக்கமளித்துள்ளார். (இ)



பாடசாலை நலனோம்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ்.கெருடாவில் இ.த.க.பாடசாலைக்கு நெல்லியடி செலான் வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் காட்சிப் பலகையை செலான் வங்கி முகாமையாளர் எஸ்.விஜயராகவன் அண்மையில் திறந்து வைத்தார்.

(படம்: மகாலிங்கம்)

## இராசி பலன்

**14.11.2019**

ஐப்பசி 28, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

துதியை முன்னிரவு 8.38 மணிவரை

ரோகினி முன்னிரவு 11.52 மணிவரை

சுபநேரம் 7.37-9.07 மணிவரை

இராகுகாலம் 1.37-3.07 மணிவரை

சர்வதேச குழந்தைகள் தினம்

வளவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சந் | ராகு |
| | | | |
| | | | |
| சனி, குரு, கேது | சுக் | சூரி,செவ் புத | |

சந்திராஷ்டமம் விசாகம், அனுசம்

**மேடம்** – வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** – பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** – குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வியாபாரத்தில் மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**கடகம்** – விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஐதாலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** – சிறப்பான நாள், செய்தொழில் முன்னேற்றகரமாக அமையும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** – நண்பர்களிடையே நிலவிய கசப்புணர்வு அகலும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** – விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் நிம்மதி காண வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்** – செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** – உடல் நலன் சீராகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்துவீர்கள்.

**மகரம்** – அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** – மனதில் தோன்றுவதை செய்ய முற்படுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மீனம்** – முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

## கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இடமிருந்து வலமாக

1.அ.ஹேமறம்யன் - 153, 2. கி.யதுஷன் - 159,
3. பே.ஜாயினி - 162, 4. வா.முத்தழகி - 152

2019ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்திபெற்ற மாணவர்களையும், 70 புள்ளிக்கு மேல் பெற்ற மற்றும் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாண வர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்த அதிபர் திருமதி மீ.இதயசிவதாஸ் அவர்களை யும் மற்றும் கற்பித்த ஆசிரியர்களான திருமதி தவறூபன் விஜிதா, திருமதி.சுபாகரன் ஜெனிதா ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-8218)

பாடசாலைச் சமூகம்
கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்


# MINISTRY OF AGRICULTURE, RURAL ECONOMIC AFFAIRS, IRRIGATION AND FISHERIES & AQUATIC RESOURCES DEVELOPMENT
## DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT
### INVITATION FOR BIDS

**Construction of Agrarian Bankat Pampaimadu ASC Area inVavuniya District**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Agrarian Development** invitessealed bids from eligible and qualified bidders for **"Construction of Agrarian Bank at Pampaimadu ASC Area in Vavuniya District"** as described below and estimated to cost **Rs.3.71Mn (excluding VAT).** The site is located at **Pampaimadu** Agrarian Service Centre (ASC) Area in Vavuniya District.
The construction period is **60 Days.**

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB). Since the Total Cost Estimate of this procurement is below Rs.50Mn, regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(ii)

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of **Building Construction for C8 and C7** with the **Construction Industry Development Authority (CIDA),** valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.** Contact numbers are: Phone: 024-2222362 , Facsimile :024-2228069

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Assistant Commissioner, Department of Agrarian Development, District Office, Vavuniya** from **14.11.2019**until **26.11.2019** from**9:00 hrs to 15:00hrs** upon payment of a non-refundable fee of **Two Thousand Rupees. (Rs.2000.00)**

6. Bids shall be delivered or sent by registered post in duplicate to the address below at **Assistant Commissioner, Department of Agrarian Development, District Office, Vavuniya**to reach**on or before 2.00p.m.**on 27.11.2019 Late bids will be rejected. Bids will be opened soon after closing at the **Assistant Commissioner, Department of Agrarian Development, District Office, Vavuniya**in presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 60 Days from the date fixed for receiving of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by,
An original Bid Security which shall be;
- In the form included in the **Section 09** in the Bidding document.
- In favour of **Assistant Commissioner,**
- for an amount of **Rs. 50,000.00**
- Valid up to 23.02.2019
- issued by one of the agencies indicated in the **Clause 16.0** of the Schedule

**OR**

An original receipt of refundable cash deposit for an amount of **Rs.25,000.00** paid to the **Assistant Commissioner, Department of Agrarian Development, District Office, Vavuniya**

**Assistant Commissioner,**
**Department of Agrarian Development,**
**District Office,**
**Vavuniya.**

(C-8219)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## ஸ்ரீதரன் கிசோத்தனா

யாழ்/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2019 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளை பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு இவருக்கு வழிகாட்டியாக அமைந்த பாடசாலை அதிபர்,ஆசிரியர் களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். (965)

இணுவில். வாழ்த்துவோர்: நவரத்தினம்-மாமா



பழைமை வாய்ந்த
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(945)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின் | வர்த்தக கையியக்க மெசின் | வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

(8716)

தொடர்புகளுக்கு : 076 796 6000. 077 968 1118 (இலங்கை)
இல் 4164336006 இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ரொரன்ரோ, கனடா)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca


## கொலைக் குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(குளியாப்பிட்டிய)

குளியாப்பிட்டிய -மெடிகொட்டுவ-மடகும்புருமுள்ள பகுதியில் தென்னந்தோட்டம் ஒன்றில் தொழில் புரிந்த நபர் மர்மான முறையில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அதே தோட்டத்தில் தொழில் புரிந்த மற்றொரு நபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நகபர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் குறித்த பகுதியைச் சேர்ந்தவர் எனக் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## உப தவிசாளருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கைது செய்யப்பட்ட கோட்டை நகர சபையின் உப தவிசாளர் பிரேம்லால் அத்துகோரலவை நாளை 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகே கொட மேலதிக நீதவான் எச்.யு.கே. பல்பொல உத்தரவிட்டார்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவின் செயலாளர் உள்ளிட்ட இருவர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பிலேயே குறித்த உப தவிசாளர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-7)

# சீக்கிய மதகுருவின் பிறந்த நாளை முன்னிட்டு யாழில் விசேட நிகழ்வுகள்





(யாழ்ப்பாணம்)

உலகின் முப்பது மில்லியன் மக்களால் பின்பற்றப்படுகின்ற உலக அளவில் ஒழுங்குபடுத்தப்பட்ட மதங்களில் ஐந்தாவது இடத்திலும் அனைத்து மதங்களின் வரிசையில் ஒன்பதாவது இடத்திலும் விளங்குகின்ற சீக்கிய மதமானது இந்தியத் துணைக் கண்டத்தின் வட மேற்கு பகுதியில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தோற்றம் பெற்று வளர்ந்து வந்ததொன்றாகும்.

இம் மதத்தின் ஸ்தாபகராக விளங்கும் ஸ்ரீ குருநானக் தேவ் 1469 ஆம் ஆண்டு அவதரித்தார். கவிஞராகவும் மதத்தை போதிப்பவராகவும் சமூகமாற்ற சிந்தனையாளராகவும் விளங்கிய இவர் கடவுள் ஒருவரே அவர் எங்கும் நிறைந்தவர் எல்லாம் வல்லவர் என்று குறிப்பிடுவதுடன் பிறப்பில் எல்லா மதத்தவர்களும் சமமானவர்களே. அவர்கள் இன,மத, மொழி, சாதி,நிற ரீதியான வேறுபாடுகளுக்கு எதிராக சமூக நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என வலியுறுத்துகின்றார். குருநானக்குடைய ஆன்மீகப் போதனைகளை ஆதாரமாகக் கொண்டே சீக்கிய மதம் வளர தொடங்கியமையால் இவரே இம்மதத்தின் ஆரம்ப கர்த்தாவாக விளங்கியதுடன் இவரின் வழியில் தோன்றிய ஏனைய ஒன்பது குருத் தலைவர்களும் தொடர்ந்து சீக்கிய மதத்தினை வழிநடத்தினர்.

குரு கிரந்த் சாகிப் எனப் பெயரிடப்பட்டு 11 ஆவது குருவாகக் கொள்ளப்படும் நூலினைத் தொடர்ந்து அதுவே சீக்கிய மதத்தின் குரு நூலாகக் கொள்ளப்பட்டதுடன் இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் காரத்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் குருநானக் தேவின் அவதார தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தியத் துணைக் கண்டத்தினதும் மேற்கு ஆசியாவின் பல பாகங்களிற்கும் பயணம் செய்த குருநானக் தனது பயணக் குறிப்புக்களில் தனது இலங்கை விஜயம் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார். தனது ஆன்மீகப் பயணங்களின் போது இந்து குருமார்களுக்கும், சமணத் துறவிகளுக்கும், இஸ்லாமியர்களுக்கும், பௌத்தர்களுக்கும், பாரசீகர்களுக்கும் பல்வேறு சொற்பொழிவுகளை ஆற்றினார். யாரெல்லாம் சகிப்புத்தன்மையைக் கொண்டிருந்தார்களோ யாரெல்லாம் தனது கொள்கையான இறைவன் ஒருவனே என்பதனை வலியுறுத்துகின்றனரோ அவர்களோடு எல்லாம் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். சமத்துவமும், சகோதரத்துவமான அன்பும், நல் ஒழுக்கத்தையும் அடிபடையாகக் கொண்ட ஆன்மீக, சமூக மற்றும் அரசியல் தளம் ஒன்றை உருவாக்கினார்.

இந் நிலையில் யாழ்.இந்தியத் துணைத் தூதரகமானது இம் மகாகுரு குருநானக்கின் 550 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் முகமாக கடந்த 11 ஆம் திகதி தூதரக வளாகமானது வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டதுடன் தூதரகத்தில் பொற்கோவில் பற்றியும் இந்தியாவில் சீக்கிய மதம் என்ற தொனிப் பொருளில் இரண்டு ஆவணக் காணொலிகள் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் சீக்கிய மதத்தைப் பற்றிய ஒரு தொகுதி நூல்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் தலைவர் திருமதி சுகந்தினி முரளிதரன் மற்றும் வவுனியா பொது நூலகர் திருமதி பாமினி குருச்சந்திரன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. (இ-7)

# நம்பகத்தன்மையுடனான ஜனாதிபதித் தேர்தலுக்கு பங்குதாரர்களாக வேண்டும்

## பொதுநலவாய கண்காணிப்பாளர்கள் கோரிக்கை

**(கொழும்பு) அமைதியானதும் வெளிப்படைத்தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனுமான, ஜனாதிபதித் தேர்தலுக்கு அனைவரும் பங்குதாரர்களாக வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொதுநலவாய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.**

பொதுநலவாய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

அரசியல் நடவடிக்கை, வாக்களிப்பு, சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள், நீதித்துறை போன்றவற்றில் அங்கத்துவம் வகிப்பவர்கள் தேர்தல்கள் ஆணையாளரின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ளனர். தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், சிவில் சமூக குழுக் கள், பொலிஸார், சர்வதேச சமூகப் பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் சர்வதேச கண்காணிப்பு உள்ளிட்ட வாக்களிப்புக்களுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள இந்தக் குழுவினர் எதிர்பார்த்துள்ளனர்.

நவம்பர் 16 ஆம் திகதிக்குப் பின்னர் இந்தக் குழுவின் பிரதிநிதிகள் தமது கண்காணிப்புக்களின் அடிப்படையில், தயாரிக்கப்பட்ட உள்ளக அறிக்கையை வெளியிடவுள்ளனர். இறுதி அறிக்கை பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் பொது மக்கள் அவற்றை பெற்றுக்கொள்ள முடியும். இந்தக் கண்காணிப்பாளர்கள் குழுவினர் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டம் தெளிவோம் 55 ஆவது நிகழ்வு

(கொழும்பு)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சட்டம் தெளிவோம் - 55 ஆவது நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் சட்டத்தரணி கே.எஸ். இரத்தினவேல் தலைமையில் இடம் பெறவுள்ளது. இதில் சிறுவர் சட்டங்கள் என்ற தலைப்பில் இலங்கை திறந்த பல்கலைக்கழக வருகைதரு சட்ட விரிவுரையாளர் சட்டத்தரணி ஜெ.தற்பரன் சிறப்புரையாற்றவுள்ளார். (இ-7-107)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2
கி.பா:17
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:B.Sc, Engineer
எதிர்பார்ப்பு: படித்தபெண் (உள்நாடு)
தொ.இ: B/10229

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: 53 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L, கட்டார்
எதிர்பார்ப்பு: A/L (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/10230

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L, பூசகர்
தொ.இ: B/10234

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா: சூரி செவ் 3 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:O/L, பூசகர்
தொ.இ: B/10235

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 4 செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L, ஊடக உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில் இந்து சமயத்தவர்களும் விரும்பத்தக்கது (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/10249

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: 57 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, Nursing Officer
எதிர்பார்ப்பு: தொழில் புரிபவர் (உள்நாடு)
தொ.இ: G/10250

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 72 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:முகாமைத்துவ பயிலுநர்
எதிர்பார்ப்பு: .பட்டதாரி (உள்நாடு)
தொ.இ: G/10254

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: சூரிசெவ் 5 இல்
தகைமை/தொழில்:B.Sc(hons), ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசன, பட்டதாரி
தொ.இ: G/10258

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17-11-2019 16-12-2019

## குருப்பெயர்ச்சியால் குதூகலம்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்






விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனும் இணைந்திருக்கிறார். குருவின் 5 ஆம் பார்வை உங்கள் இராசியின் மீது பதிகிறது. எனவே இந்த மாதம் எல்லா வழிகளிலும் நன்மைகளைக் கொடுக்கும் மாதம் என்றே கருதலாம். குடும்ப முன்னேற்றம் கூடுதலாகக் கிடைக்கும். கொடுக்கல் - வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும்.

'குரு பார்க்க கோடி நன்மை' என்பதற்கேற்ப தற்சமயம் நடந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாகவே இருக்கிறது. உத்தியோகம், தொழிலில் உன்னத நிலையை காண்பீர்கள். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

சப்தம ஸ்தானம் எனப்படும் களத்திர ஸ்தானம், குடும்பம் பற்றி அறிந்து கொள்வது மட்டுமல்லாமல் சுற்றம், நட்பு, அரசு விருது, சமூக அந்தஸ்து, வெளிநாட்டு முயற்சி, பயணத்தால் பலன், ஆடை - ஆபரணச் சேர்க்கை, தம்பதியரின் ஒற்றுமை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் விளக்கும் இடமாகும். அப்படிப்பட்ட இடத்தில் வெற்றிகள் ஸ்தானாதிபதி புதனுடன் உங்கள் இராசிநாதன் செவ்வாயும் இணைந்து சஞ்சரிப்பதால் சிறப்பான பலன் கிடைக்கப்போகிறது. குறிப்பாக சொத்துக்கள் வாங்கும் யோகம் முதல் சொந்தங்கள் வாழ்த்தும் யோகம் வரை ஏற்படும். அத்தனை காரியங்களும் அடுக்கடுக்காக நடைபெறும். உடன்பிறப்புகளின் இல்லத் திருமண விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். உங்கள் பணியைப் பாராட்டியும், திறமையை மதித்தும் வெளிநாட்டில் இருந்துகூட அழைப்புகள் வரலாம். ஊதிய உயர்வோடு, இருக்கும் இடத்திலேயே ஒருசிலருக்கு நல்ல வாய்ப்புகளும் வந்து சேரும்.

இம்மாதம் திருக்கார்த்திகைத் திருநாள் வருவதால், அன்றைய தினம் முழுவதும் விரதமிருந்து இறைவனை வழிபட்டால், எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் முன்னேற்றம் ஏற்படும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு எட்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன், நவம்பர் 22 ஆம் திகதி ஒன்பதாம் இடமான தனுசு இராசிக்கு செல்கிறார். அங்கு குருவோடு இணைந்து முரண்பாடான கிரகச்சேர்க்கை உருவாகிறது. குருவும், சுக்கிரனும் இணைந்து சஞ்சரிக்கிற பொழுது திட்டமிட்ட காரியங்கள் நடைபெறாவிட்டாலும், திட்டமிடாத காரியங்களில் வெற்றி கிடைக்கும். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 9 இல் சஞ்சரிக்கும் பொழுது வாகன யோகம் முதல் வளர்ச்சிக்குரிய அனைத்து யோகங் களையும் வழங்குவார்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

இதுவரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த புதன், டிசெம்பர் 3 ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானமான விருச்சிக இராசியில் அடியெடுத்து வைக்கப் போகிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும். சேமிப்பு உச்சநிலையை அடையும். சில மாதங்களாக நடைபெறாத ஒருசில காரியங்கள், இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். உடல் நலம் சீராக மாற்று மருத்துவம் உங்களுக்கு கைகொடுத்து உதவும். இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாகவே அமையப் போகிறது. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். வழக்குகள் சாதகமாக அமையும்.

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டிகள் விலகும். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப் பெருமான் சந்நிதிக்குச் சென்று கந்தசஷ்டி கவசம் பாடி வழிபட்டால் காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் நீண்ட நாளைய கனவு நனவாகப் போகிறது. நேசிப்பவர்களின் எண்ணிக்கை கூடும். குரு பார்வையால் அதிர்ஷடத்தின் அளவு அதிகரிக்கும். கணவன் - மனைவி ஒற்றுமை பலப்படும். எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி காண்பீர்கள்.

ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. தாய்வழி ஆதரவு திருப்தி தரும். கல்யாண முயற்சிகள் கைகூடுவது மட்டுமல்லாமல், குருவின் பஞ்சம பார்வையால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறப்போகிறது. பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானம் வந்து சேரும்.

மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும். பணிபுரியும் பெண்களுக்கு அனுகூலம் உண்டு. திறமை பளிச்சிடும். கேட்ட சலுகைகள் கிடைக்கும். உத்தியோக உயர்வால் உன்னத நிலையை அடைவீர்கள். குருபகவான் வழிபாடு குழப்பங்களைத் தீர்க்கும்.

## விரயங்களைச் சுபமாக மாற்றுங்கள்






விகாரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சனி, குரு, கேது ஆகிய மூன்று கிரகங்கள் இணைந்திருக்கின்றன. அஷ்டமத்தில் மாபெரும் கிரகங்கள் மூன்று சஞ்சரிக்கின்ற பொழுது, திடீர் திடீரென மாற்றங்கள் வந்து கொண்டேயிருக்கும். குறிப்பாக இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம், இலாகா மாற்றம் என்று ஏதேனும் ஒரு மாற்றம் உருவாகலாம். வரும் மாற்றங்கள் உங்களுக்கு உகந்தது தானா? என்பதை யோசனை செய்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் உத்தியோகத்தில் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும். யாரிடமாவது நீங்கள் பொறுப்புகளை ஒப்படைத்தால் அது நடைபெறாமல் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். தனுசில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே பணப் புழக்கம் சிறப்பாகவே இருக்கும். ஆனால் விரயங்கள் அதைவிட அதிகமாக இருக்கும். தன்னம்பிக்கையும், தைரியமும் மிக்க நீங்கள் அதைச் சமாளித்து விடுவீர்கள். வீண் விரயங்களில் இருந்து விடுபட வேண்டுமானால், இது போன்ற காலங்களில் சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது. தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்குவது, வீடு கட்டுவது அல்லது வாங்குவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம். 'சரி.. இவற்றுக்கெல்லாம் பணம் வேண்டுமே.. வந்து சேருமா?' என்று நீங்கள் நினைக்கலாம்.

உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான தன ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், பணத்தை வைத்துக்கொண்டு காரியத்தைத் தொடங்க இயலாது. காரியத்தை தொடங்கிவிட்டால் பணம் ஏதாவது ஒரு வகையில் உங்களிடம் வந்து சேர்ந்து விடும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது, உறவுகளோடு பகை பாராட்டக் கூடாது, அனுசரித்துத்தான் செல்ல வேண்டும். மாபெரும் கிரகங்களான சனி, கேது, குரு ஆகிய மூன்றும் பொதுவாக கூட்டுக்கிரகமாக அஷ்டமத்தில் உலா வரும்பொழுது மிகமிக கவனமுடன் செயற்பட வேண்டும்.

இம்மாதம் முருகப்பெருமானுக்கு உகந்த திருக்கார்த்திகை திருநாள் வருகிறது. அன்றைய தினம் அருகிலிருக்கும் முருகப்பெருமான் ஆலயம் சென்று அபிஷேக ஆராதனையில் கலந்து கொண்டு வாருங்கள். முருகன் அருளால் முன்னேற்றப் பாதையில் ஏற்பட்ட தடைகள் அகலும்.

தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் சுக்கிரன் எதிர்வரும் நவம்பர் 22 ஆம் திகதி அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். சுக்ரன், உங்கள் இராசிக்கு மட்டுமல்லாமல் 8 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர். 6-க்கு அதிபதி 8இல் சஞ்சரிக்கும்பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப எதிர்பாராத சில நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரலாம். குறிப்பாக உத்தியோகம் சம்பந்தமாக நீங்கள் ஏதேனும் புதுமுயற்சி செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். பணி நிரந்தரம் ஆகவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அது கைகூடும். எதிரிகளின் பலம் குறையும் இந்த நேரத்தில் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கலாம்.

விருச்சிக புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசம்பர் 3 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செல்கிறார். சப்தம ஸ்தானத்திற்கு தனாதிபதி வரும்பொழுது வருமானம் திருப்திகரமாக இருக்கும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்கக்கூடிய வாய்ப்பும் உருவாகும். நீண்ட தூரப் பயணங்கள் அதிகரித்தாலும், அது பலன் தருவதாக அமையும். இக்காலத்தில் புத- ஆதித்ய யோகம் செயற்படுவதால் பிள்ளைகளின் மேற்படிப்பு அல்லது உத்தியோகம் சம்பந்தமாக எடுக்கும் முயற்சி கைகூடும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். துணிந்து எந்த முடிவும் எடுக்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பணப் பற்றாக் குறையால் ஒருசிலர் அருகில் இருப்பவர்களின் உதவியை நாட வேண்டியதிருக்கும். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். தாய்வழி ஆதரவும், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும் எதிர்பார்த்த அளவு கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம். உடன்பணிபுரிபவர்களால் சில உபத்திரவங்கள் ஏற்பட்டு அகலும். சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# காணாமலாக்கப்பட்ட உறவுகளைத்தேடிய போராட்டத்தின் 1000 ஆவது நாள் நாளை மறுதினம்

(நெளுக்குளம்)

வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி அவர்களின் உறவுகளால் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி 1000 ஆவது நாளை எட்டுகிறது.

வடக்கு-கிழக்கு முழுவதும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி அவர்களுக்கான நீதியை வேண்டி உறவுகள் தமது தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தவகையில் மாவட்டம் தோறும் சுழற்சி முறையில் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தை ஆரம்பித்து எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் 1000 ஆவது நாள் நிறைவடைகிறது.


வடக்கு-கிழக்கின் 8 மாவட்டங்களிலும் உள்ள உறவுகள் காணாமல் போன தமது உறவுகளுக்கான நீதியை அரசிடமும் சர்வதேசத்திடமும் வேண்டி பல்வேறு சந்தர்ப்பங்களில் குரலெழுப்பி வருகின்றனர். இந்த நிலையில் பல தரப்புக்களால் அச்சுறுத்தலுக்குள்ளாகிய நிலையில் தமது போராட்டங்களை முன்னெடுத்தனர்.

ஆனால் குறித்த உறவுகளின் கோரிக்கைக்கு இதுவரை எந்தவிதமான தீர்வும் கிடைக்காத நிலையில் தமது போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் தாம் போராட்டம் மேற்கொண்டுவரும் போராட்ட களத்தில் நாளை தமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (9-299)




# 4 இலட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்பு



(முறிகண்டி)

பூநகரி பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடத்தவிருந்த 4 லட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் பூநகரி பொலிஸாரினால் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

பூநகரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப் ரக வாகனத்தில் முதிரை மரக்குற்றிகள் கடத்தப்படுவதாக பூநகரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எம்.ஏ.என். ரணவீர தலைமையிலான குழுவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது நேற்று அதிகாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம்-மன்னார் வீதி ஊடாக அனுமதிப்பத்திரம் இல்லாது 17 மரக்குற்றிகளை ஏற்றியவாறு சென்ற வாகனத்தை பொலிஸார் இடைமறித்துள்ளனர்.

அப்போது வாகனத்தை செலுத்திய சாரதி தப்பி ஓடியுள்ளார். முதிரை குற்றிகளை மீட்ட பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (9-100)

# வன்னேரிக்குளத்தின் புனரமைப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை




(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் தென்பகுதி ஊடாக வெளியேறும் நீரினை நிரந்தரமாகத் தடுக்க வேண்டும் என்ற விடயத்தினை மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் ஆராய வேண்டும் என வன்னேரிக்குளம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். 1950ஆம் ஆண்டில் வன்னேரிக்குளம் உருவாக்கப்பட்ட போதும் இதுவரை நிரந்தரப் புனரமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் குளத்தின் தென்பகுதி ஊடாக குளத்தின் நீர் வெளியேறுவதன் காரணமாக எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள சிறுபோக நெற்செய்கை கேள்விக்குறியாக மாறியுள்ளது.

இந்நிலையில் வன்னேரிக் குளத்தில் இருந்து நீர் வெளியேறுவதைத் தடுப்பதற்கு நிரந்தரக் கட்டுமானங்களை உருவாக்குவது தொடர்பாக மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் முக்கிய விடயமாக ஆராய வேண்டும் எனவும் இதற்காக அக்கராயன் கமநல சேவை நிலையம் ஊடாக தெரிவு செய்யப்பட்டவர்கள் இப்பிரச்சினையினை மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் தெரியப்படுத்த வேண்டும் எனவும் வன்னேரிக்குளம் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-350)

# வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கான விசேட அணிவகுப்பு





(நெளுக்குளம்)

வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரமவின் பிரியாவிடை நிகழ்வுகள் நேற்றுக் காலை பொலிஸ் தலைமையகத்தின் மைதானத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸலால் சில்வா தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 2018 ஆம் ஆண்டு வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபாராக கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட அனுரா அபேயவிக்கிரமவின் பதவிக் காலம் எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் நிறைவடைவதை முன்னிட்டு நேற்று அவருக்கான விசேட அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

இன்றைய இந்நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர்களான மல்வலகே. வீரக்கோன், வவுனியா, நெடுங்கேணி, கனகராயன்குளம், ஓமந்தை, பூவரசன் குளம், செட்டிகுளம் போன்ற பகுதியின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸார், சர்வ மதத்தலைவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9-299)

# அனர்த்தம் தொடர்பாக இளையோருக்கு விழிப்புணர்வு



தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் "அறிவால் விழித்தெழுந்து அனர்த்த எச்சரிக்கையை குறைப்போம்" என்ற தொனிப்பொருளில் இளைஞர்.யுவதிகளை மையப்படுத்தி கருத்தரங்கு ஒன்று மன்னார் கிளை காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்ட அனர்த்தத்தின் போது தன்னார்வ சேவையாற்ற இளைஞர் குழு ஒன்று நிர்மாணிக்கப்பட்டு, மன்னார் கிளையின் இணைப்பாளர் அ.பெனடிக்ற் குரூஸால் இளைஞர்களுக்கு அனர்த்தம் தொடர்பான கையேடு ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. இதில் வளவாளராக ஆன் அமலினி பிகுறாடோ கலந்து கொண்டார். (9)

### வவு.தெற்கு தமிழ் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மறைவு



(நெளுக்குளம்)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் தலைவருமான கனகசபை சிவலிங்கம் தனது 61 வது வயதில் நேற்று காலமானார்.

வவுனியா சேமமடுவைப் பிறப்பிடமாக கொண்ட அவர் கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இலங்கை தமிழரசுக் கட்சியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) சார்பில் போட்டியிட்டு பிரதேச சபை தவிசாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். (9-299)

# விவசாயக்கடன் வழங்கல்





(மன்னார்)

மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதயத்தினால் கிராம மட்டத்தில் இயங்கும் சிறு குழுக்களில் 200 பயனாளி குடும்பங்களுக்கு காலபோக நெற்செய்கைக்கான விவசாயக் கடன் வழங்கும் நிகழ்வு கரித்தாஸ்-வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தலைமையில் நேற்று மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இத்தொண்டு நிறுவனத்தின் 11 செயற்பாட்டுப்பிரிவுகளில் ஒரு பிரிவாக விளங்கும் ஒருங்கிணைந்த முழு மனித அபிவிருத்திச்செயற்றிட்டத்தின் கீழ் கிராம மட்டங்களில் இயங்கும் குழுக்களுக்கே இவ் உதவி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தினால் விவசாயக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கடன் உதவி வழங்கும் திட்டமானது மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு மிகவும் உறுதுணையாக உள்ளது எனவும், குறித்த கடன் திட்டத்தை பெற்றுக்கொண்டவர்கள் சிறந்த முறையில் பயனடைய வேண்டும் என மன்னார் கரித்தாஸ்-வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்பணி செ.அன்ரன் அடிகளார் தெரிவித்தார். (9-285)

# சட்டவிரோதமாக இந்தியா செல்ல முயன்ற கிளிநொச்சி, மன்னாரை சேர்ந்த 8 பேர் கைது



(மன்னார்)

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிற்கு செல்ல முயன்ற , கிளிநொச்சி மற்றும் மன்னாரைச் சேர்ந்த 08 பேர் தலைமன்னார் வெலிபர பகுதியில் வைத்து நேற்றுக் காலை கடற்படை யால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கைது செய்யப்பட்டவர்களில் கிளிநொச்சியை சேர்ந்த தந்தை, தாய் இரு குழந்தைகளும், அவர்களை அழைத்துச்சென்ற 4 பேரும் அடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டனர்.

பின்னர் குறித்த 8 பேரும் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது தந்தை தாய் மற்றும் இரு குழந்தைகள் உட்பட நால்வரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் அவர்களை அழைத்துச்சென்றதாக சந்தேகிக்கப்படும் படகோட்டிகள் 4 பேரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (9-285)

# ஆடு திருடியவர்கள் சிக்கினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கோட்டைகட்டிய குளம் கிராமத்தில் ஆட்டுத் திருட்டு கிராம மக்களினால் முறியடிக்கப்பட்டுள்ளது. கோட்டைகட்டிய குளம் கிராமத்தில் வீட்டின் அருகில் கட்டப்பட்டிருந்த ஆடு ஒன்றினை ஆட்டோவில் வந்த இருவர் ஏற்றிச் செல்வதை அவதானித்த ஆட்டின் உரிமையாளர் ஆட்டோவைப் பின் தொடர்ந்ததுடன் கிராம மக்களுக்கு தகவல்கள் வழங்கிய நிலையில் அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் குறித்த ஆட்டோ பொது மக்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு குறித்த ஆடு மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி செல்வா நகரினைச் சேர்ந்த நபரொருவரும் துணுக்காய் உயிலங்குளத்தினைச் சேர்ந்த நபரொருவரும் இணைந்தே குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளனர். ஏற்கனவே கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் கிராமங்களில் சுமார் முப்பது ஆடுகள் திருடப்பட்டுள்ளன குறித்த திருட்டுக்களுடன் சம்பந்தப்பட்டதாக இரு நபர்கள் மல்லாவிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (9-350)



கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கிளிநொச்சி றோட்டறிக் கழகத்தினால் மருத்துவ உதவி உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. ரூபா 50 ஆயிரம் நிதி செலவில் **TPN** மருந்து புலம்பெயர் நாடுகளில் வாழும் மானி லோகன், நந்தினி முருகவேல் ஆகியோர்களினால் வழங்கப்பட்ட நிதி உதவியில் இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (படம்: அக்கராயன் செய்தியாளர்)

# அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணி



முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாளை முன்னிட்டு சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது .

இராணுவத்தின் பிடியில் குறித்த துயிலும் இல்லம் இருக்கும் நிலையில் அதன் ஒரு பகுதியில் மட்டும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் கடந்த சில வருடங்களாக நடைபெற்று வரும் நிலையில் இவ்வருடமும் நவம்பர் 27 இல் மாவீரர் நாளை நினைவு கூரும் முகமாக அளம்பில் கிராம மக்களாலும் இளைஞர்களாலும் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது . (9)

# அடிக்கல் நாட்டல்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாயவனூர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாயவனூர் தெற்கு சாரதாம்பாள் கோவில் வீதியில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பெட்டிப் பாலம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வட்டக்கச்சி வட்டார கரைச்சி பிரதேச உறுப்பினர் எஸ்.பொன்னுத்துரையின் ஏற்பாட்டில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் குறித்த கல்லை நாட்டி வைத்தார். குறித்த பாலத்தினை மாவடி அம்மன் சனசமூக நிலையத்தினர் பொறுப்பேற்று வேலைகளை முன்னெடுக்கின்றனர். (9-350)

# பகிரங்க அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழக்கிலக்கம்:-24588 வழக்குடன் தொடர்புடைய சான்றுப்பொருளான NPGI 5854 மோட்டார் சைக்கிள் கிளிநொச்சி பொலிஸாரினால் பாரப்படுத்தப் பட்டுள்ளது. அதனை உரிமைகோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 25.02.2020 ஆம் திகதிக்கு முன்னர் மன்றுக்கு சென்று பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)




# பெண் தலைமைத்துவ குடும்ப சாதனையாளருக்கு கடனுதவி




(பனிக்கன்குளம்)


போரினால் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவ குடும்ப சாதனையாளர் திருமதி கி. சஜிராணிக்கு அவரது தொழில் முயற்சியை மேலும் விருத்தி செய்யும் நோக்கோடு DATA அமைப்பினால் இருபத்தைந்து இலட்சம் ரூபாய் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கடனுதவிக்கான காசோலை நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சஜிரானியால் உருவாக்கப்பட்ட அப்பள உற்பத்தி தொழிற்சாலை தற்போது அதன் அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்கின்றது.

பாதிக்கப்பட்டோர் பதின்மம் கழிந்தும் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற சுயமதிப்பீட்டு மாநாட்டில் சாதனையாளர் வரிசையில் சஜிராணி கலந்து கொண்டு, தான் கணவரை இழந்த பின்னர் எவ்வாறு இந்தச் சமூகத்தில் ஒரு தொழிலை ஆரம்பித்து அதனை வெற்றிகரமாக கொண்டு செல்கின்றார் என தனது சாதனைப் பயணம் குறித்து விளக்கம் அளித்திருந்தார். அதன் பின்னர் அவரது தொழில் முயற்சியினை விருத்தி செய்வதற்காக அவருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபா கடனுதவி தேவைப்படும் விடயத்தினையும் DATA அமைப்பிடம் தெரியப்படுத்தியிருந்தார்.

அவரது கோரிக்கையினை ஏற்று அவரது தொழில் முயற்சிக்கு கடனுதவி வழங்குபவர் ஒருவரை DATA அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. செல்வி விஜயலட்சுமி பசுபதிப்பிள்ளை இந்த நிதியினை அளித்துள்ளார். குறித்த அப்பள தொழிற் சாலையில் 06 மாற்றுத் திறனாளிகள் பணியாற்றி வருகிறார்கள். அத்தோடு அங்கு பணியாற்றுபவர்கள் போரினால் பெரும்பாலும் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்பட்டவ ர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது . (9-281)

# வீதி புனரமைப்பு



(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இத்தாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட இத்தாவில் முருகமூர்த்தி ஆலய பிரதான வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியினால் பயணம் செய்வதற்கு மிகவும் அல்லல்பட்ட கிராம மக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் விடுத்த தொடர்ச்சியான வேண்டுகோளை ஏற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அறிவுறுத்தலுக்கு அமைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் குறித்த வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுத்திருந்தார்.

காற்றாலை மின் உற்பத்தி நிலையம் ஊடாக வருடாவருடம் வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு கிடைக்கப் பெறுகின்ற நன்கொடை மூலம் குறித்த வீதியை திருத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-315)




ஸ்ரீ குருநானக் தேவின் 550 ஆவது பிறந்தநாள் நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமத்தில் உள்ள 170 இற்கும் மேற்பட்ட சிறார்களுக்கும் மதிய விருந்தும் அவர்கள் கலைத்துறையில் தமது திறன்களை வெளிப்படுத்த உதவும் வகையில் 2 இலட்சம் ரூபா பெறுமதியில் இசைக்கருவிகள் என்பன வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன், இல்லத்தின் தலைவர் நித்தியானந்தம், தூதரக அதிகாரிகள் ஆச்சிரம உறுப்பினர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பாரதம்

## பள்ளத்தில் மண் சரிந்து 6 இந்திய தொழிலாளர்கள் பலி

### ஓமானில் பரிதாபம்



(மஸ்கட்)

ஓமான் நாட்டில், குழாய் பதிக்க தோண்டிய பள்ளத்தில் புதைந்து 6 இந்திய தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அரபு நாடான ஓமான் நாட்டின் தலைநகர் மஸ்கட்டில் சீப் என்ற இடத்தில் குழாய் பதிக்க பள்ளம் தோண்டும் பணி நடந்து வந்தது. பூமிக்கு அடியில் 14 அடி ஆழத்தில் பள்ளம் தோண்டப்பட்டது. இப்பணியில் இந்திய கட்டுமான தொழிலாளர்கள் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, பலத்த மழை பெய்தது. அதையடுத்து, பள்ளத்துக்கு மேலே குவிக்கப்பட்ட மண், பள்ளத்துக்குள் சரிந்தது. உள்ளே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது மண் விழுந்து அமுக்கியது.

இதில், இந்திய தொழிலாளர்கள் உயிருடன் புதைந்து 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 12 மணி நேர போராட்டத்துக்கு பிறகு அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.

இதற்கிடையே, இந்த பரிதாப சம்பவம் குறித்து மஸ்கட் நகரில் உள்ள இந்திய தூதரகம் தனது 'டுவிட்டர்' பக்கத்தில் மஸ்கட் நகரில் சீப் பகுதியில் கன மழையை தொடர்ந்து, இந்தியர்கள் என கருதப்படும் 6 தொழிலாளர்கள் பலியான தகவல் அறிந்து வேதனை அடைந்தோம் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## பேரறிவாளன் நிரந்தரமாக விடுதலை பெற வேண்டும்

### தாய் அற்புதம்மாள் வேண்டுகோள்



(சென்னை)

பேரறிவாளன் நிரந்தரமாக விடுதலை பெற்று வீட்டுக்கு திரும்ப வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என அவரது தாயார் அற்புதம்மாள் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன், தனது தந்தையின் உடல் நிலையைக் கவனிப்பதற்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் பிணையில் வெளிவந்தார்.

ஜோலார்பேட்டை வீட்டிற்கு வந்த பேரறிவாளனை அவரது தாயார் அற்புதம்மாள் மற்றும் குடும்பத்தினர் கண்ணீர் மல்க வரவேற்றனர்.

அப்போது அற்புதம்மாள் கூறுகையில், "தனது மகன் இரண்டாவது முறையாக பிணையில் வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. தனக்கு இது மட்டும் போதாது.

பேரறிவாளனின் 28 ஆண்டு கால வாழ்க்கை வீணாகி விட்டது. தற்போது 29 ஆண்டு நடக்கிறது. அவர் விடுதலை பெற்று வீட்டுக்கு வர வேண்டும். அது தான் தனக்கு முழு நிம்மதி. அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இரண்டாவது முறையாக பரோல் வழங்கிய அரசுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம். பேரறிவாளன் உட்பட 7 பேரையும் அரசு விடுதலை செய்யும் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம்" எனத் தெரிவித்தார். (2)

## 3 ஆவது முறையாக ஜனாதிபதி ஆட்சியை சந்தித்த மகாராஷ்டிரா

(மும்பை)

அரசியல் கட்சிகள் ஆட்சி அமைக்க தவறியதை அடுத்து மகாராஷ்ரா 3 ஆவது முறையாக ஜனாதிபதி ஆட்சியை சந்திக்கிறது.

மகாராஷ்டிராவில் அரசியல் கட்சிகள் ஆட்சி அமைக்க தவறியதை அடுத்து, நேற்று முன்தினம் அதிரடியாக ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. இந்த மாநிலம் ஜனாதிபதி ஆட்சியை சந்திப்பது என்பது இது முதல் முறையல்ல. 1960 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி உருவான மகாராஷ்டிரா தனது 59 ஆண்டுகால வரலாற்றில் ஏற்கனவே இரண்டு முறை ஜனாதிபதி ஆட்சியை கண்டு இருக்கிறது.

1978 ஆம் ஆண்டு வசந்த்தத்தா தலைமையில் அமைந்த காங்கிரஸ் அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு முற்போக்கு ஜனநாயக முன்னணியை தோற்றுவித்து சரத்பவார் ஆட்சிக்கு வந்தார்.

1980 ஆம் ஆண்டு மத்தியில் மீண்டும் ஆட்சிக்கு வந்த இந்திரா காந்தி சரத்பவார் தலைமையிலான முற்போக்கு ஜனநாயக முன்னணி அரசை அதிரடியாக கலைத்தார். அப்போது தான் மகாராஷ்டிராவில் முதல் முறையாக ஜனாதிபதி ஆட்சி அறிமுகம் செய்யப்பட்டது.

இதற்கு பிறகு 34 ஆண்டுகளுக்கு பின்னர் 2014 ஆம் ஆண்டு மீண்டும் ஜனாதிபதி ஆட்சி அமுலானது. பிரிதிவிராஜ் சவான் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியின்போது முதலமைச்சர் பதவியை பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட மோதல் காரணமாக சரத்பவார் ஆதரவை விலக்கி கொண்டார். இதனால் அரசு கவிழ்ந்து மீண்டும் இங்கு ஜனாதிபதி ஆட்சி அமுலானது.

தற்போது, ஆட்சி அமைக்க பெரும்பான்மை பெற்றிருந்த போதும், முதலமைச்சர் பதவியை பங்கிட்டு கொள்வதில் பாரதிய ஜனதா, சிவசேனா கட்சிகளுக்கு இடையே ஏற்பட்ட குடுமிபிடி சண்டையால் 5 வருடத்தில் மீண்டும் ஜனாதிபதி ஆட்சிக்கு மகாராஷ்டிரா தள்ளப்பட்டு இருக்கிறமை குறிப்பிடத்தக்கது. (2)

## இரசாயனத் தாக்கு பாலர் பாடசாலை

### 51 சிறார்கள், 3 ஆசி

(பீஜிங்)

சீனாவில் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள ஒரு பாலர் பாடசாலையில் நபரொருவர் மேற்கொண்ட இரசாயன தாக்குதலில் ஐம்பத்தொரு சிறுவர்களும் மூன்று ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக சீன அரசு ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டன.

யுனான் மாகாணத்தின் கெயுவான் நகரில் உள்ள பாலர் பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை, 23 வயதான சந்தேக நபர் சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிறைந்த ஒரு வகுப்பறையில் அரிக்கும் அமில திரவத்தை தெளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் இருவர் அதிகமாக பாதிப்படைந்தனர். இருப்பினும் அவர்களின் காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் கடு

◆மோசமான போக்குவரத்
◆1000 இற்கும் மேற்பட்ட வி
◆பாடசாலைகளுக்கும் விடு

(வோஷிங்டன்)

ஆர்க்டிக் துருவப் பகுதியில் ஏற்பட்ட காற்று நிறை அமெரிக்காவின் பல இடங்களுக்கு குறைந்த வெப்பநிலையை பதிவு செய்துள்ளது.

சைபீரியாவை அண்மித்த பிராந்தியத்தில் ஆரம்பித்த ஆர்க் டிக் பனி வெடிப்புகள் பல பகுதிகளுக்கு கடும் பனியையும், கனமான பனிமூட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மோசமான போக்குவரத்து நிலைமைகள் காரணமாக



## ஆப்கானிஸ்தா காபூலில் கார்கு

### 7 பேர் உயிரிழப்பு;

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கார்குண்டு வெடித்ததில் 7 பேர் உயிரிழந்தனர். ஆப்கானிஸ்தானில் குறிப்பிட்ட சில பகுதிகளில் தலிபான் பயங்கரவாதிகள் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

அரசுக்கு எதிராக அவர்கள் அவ்வப்போது பயங்கரவாத தாக்குதலை நடத்தி வருகின்றனர். இராணுவமும் காவல் துறையும் அவர்களுக்கு பதிலடி



# வெளிநாடு

## ...ததலுக்குள்ளான ...லைச் சிறார்கள்

### ...சிரியர்கள் பாதிப்பு

தாக்குதலுக்கு சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் சமூகத்தை பழிவாங்கும் செயலாகவே இரசாயனத்தை தெளித்ததாகக் கூறப்படுகிறது.

இராசயான தாக்குதலுக்கு பயன்படுத்திய காஸ்டிக் சோடா - சோடியம் ஹைட்ராக்சைடு சோப்பு, காகிதம் மற்றும் பல்வேறு சாயங்கள் உள்ளிட்ட பல பொதுவான தயாரிப்புகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் படி, இரசாயன தாக்குதலுக்கு பயன்படுத்திய காஸ்டிக் சோடா கண்களையும் தோலையும் எரிச்சலடையச் செய்யலாம். அல்லது எரிக்கலாம், ஒவ்வாமை எதிர் வினையைத் தூண்டும். அல்லது தற்காலிக முடி உதிர்தலை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## ...டும் பனிப்பொழிவு

### ...த்தால் நால்வர் உயிரிழப்பு ...விமானங்கள் ரத்து ...டுமுறை அறிவிப்பு



நான்கு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன், சுமார் 1,000 இற்கும் மேற்பட்ட விமான போக்குவரத்துகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பல பகுதிகளில் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, சமவெளிகளிலிருந்து கிழக்கு கடற்கரை நோக்கி கனமான காற்று தொடர்ந்து பரவி வருவதாக தேசிய வானிலை சேவை (என்.எஸ்.டபிள்யூ) தெரிவித்துள்ளது. (2)

## ...ான் தலைநகர் ...தண்டு வெடிப்பு

### ...; 7 பேர் காயம்



கொடுத்து வருகிறது.

இந்நிலையில், தலைநகர் காபூலில் நேற்றுக்காலை கார் குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. பயங்கரவாதிகள் காரில் வெடிகுண்டை வைத்து வெடிக்கச் செய்துள்ளனர். இந்த தாக்குதலில் 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (2)

## கொத்துக் கொத்தாக செத்து மடிந்த வெளிநாட்டுப் பறவைகள்-ராஜஸ்தானில் சோகம்



(ஜெய்ப்பூர்)

ராஜஸ்தானில் உள்ள சாம்பர் ஏரியில் இடம்பெயர்ந்து வந்த ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பறவைகள் செத்துக் கிடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் உள்ளது சாம்பர் உப்பு ஏரி. 35.5 கி.மீ. நீளம் உடைய இந்த ஏரி இந்தியாவின் மிகப்பெரிய உப்புநீர் ஏரி ஆகும். ஆண்டுதோறும் குளிர் காலங்களில் வெளிநாட்டு பறவைகள் இடம்பெயர்ந்து இங்கு வருவது வழக்கம். சுமார் 10 முதல் 20 வகையான அழகிய பறவைகள் இங்கு வருகை தருகின்றன. சுற்றுலாப்பயணிகளும், அப்பகுதி மக்களும் அழகிய பறவைகளை கண்டு களிப்பது வழக்கம்.

இந்நிலையில், சாம்பர் ஏரியில் ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப்பறவைகள் அண்மையில் மர்மமான முறையில் இறந்து கிடந்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த துறை சார்ந்த அதிகாரிகள் பறவைகளின் உடல்களை கைப்பற்றினர்.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில், 'நீரின் மாசுத்தன்மை காரணமாக பறவைகள் இறந்திருக்கக் கூடும். 10 வகையான பறவைகள் என மொத்தம் 1500 பறவைகள் இறந்தன. ஆனால் 5,000 பறவைகள் இறந்திருக்கலாம் என உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர். ஏரியின் நீர் சோதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பறவைகளின் உடல்களும் உடற்கூறு ஆய்விற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன' என தெரிவித்தனர்.

கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'நீரில் உப்புத்தன்மை அதிகரிப்பதும் பறவைகளின் இறப்பிற்கு ஒரு காரணமாக இருக்கலாம், ஏனெனில் இரத்தத்தில் உப்பு செறிவு அதிகரித்தால் இரத்த ஓட்டத்தின் வேகம் குறைந்து, மூளை போன்ற உள் உறுப்புகளின் செயற்பாடுகள் நிறுத்தப்படலாம்' என கூறினார். (2)

## இத்தாலியில் கடும் வெள்ளப்பெருக்கு; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(ரோம்)


இத்தாலியில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் வெனிஸ் நகரில் நேற்று முன்தினம் வரை 187 சென்ரி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

புனித மார்க் சதுக்கம், பெசிலிக்கா தேவாலயம், குடியிருப்பு பகுதிகள் உள்ளிட்ட இடங்களிலும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

இதன் காரணமாக பேரழிவு கால அவசர நிலையை அறிவிக்கவுள்ளதாக வெனிஸ் நகர மேயர் தெரிவித்தார். (2)

## சிம்பாவேயில் கடும் வரட்சி காரணமாக 2 மாதங்களில் 200 யானைகள் பலி



(ஹராரே)

சிம்பாவேயில் நிலவும் கடும் வரட்சி காரணமாக அந்நாட்டின் வாங்கே தேசிய பூங்காவில் கடந்த இர்ண்டு மாதங்களில் 200 இற்கும் மேற்பட்ட யானைகள் உயிரிழந்துள்ளன.

நாட்டில் நிலவும் வரட்சி காரணமாக, தேசிய பூங்காவில் 200 இற்கும்மேற்பட்ட யானைகள் உயிரிழந்து விட்டன. நாட்டில் உள்ள மற்ற விலங்கியல் பூங்காக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை, மான் இனங்கள் என அனைத்து விலங்கினங்கள் ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன. சில பறவை இனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அவை, மரக்கிளைகளில் மட்டுமே வாழ முடியும். ஆனால், அந்த மரங்களை யானைகள் முறித்துவிட்டன. மழை பெய்தால் மட்டுமே நிலைமை மேம்படும் என உயிரியல் பூங்காவின் செய்தியாளர்கள் தெரிவித்தனர். (2)

# உயர்தரப் பரீட்சைப்பெறுபேறுகள் அடுத்த மாத இறுதியில் வெளியிடப்படும்

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

இம்முறை வெளியிடப்படவுள்ள பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அகில இலங்கை ரீதியாக முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரங்கள் வெளியிடப்படமாட்டாது.

தரம் ஐந்து புலமைப் பரிவில் பரீட்சையின் போது கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையே கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியிடும் போது பின்பற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விபரங்களை வெளியிடும் நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது.

பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் விபரங்கள் அடுத்த மாத முற்பகுதியில் அறிவிக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# பதக்கம் சூட்டும் விழா ஜனாதிபதி தலைமையில்



(கெழும்பு)

மூன்று தசாப்தகாலமாக இருந்து வந்த கொடூர பயங்கரவாதத்தை மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் நிறைவு செய்து தாய்நாட்டிற்கு அமைதியையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வருவதற்கு உயிரைப் பணயம் வைத்து உன்னத சேவையை செய்த இலங்கை விமானப்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவி நிலையில் உள்ளவர்களுக்கு வீரோதார விபூஷன, வீர விக்ரம விபூஷன, ரணவிக்ரம மற்றும் ரண சூர பதக்கம் சூட்டும் விழா முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

வீரோதார விபூஷன பதக்கம் 5 பேருக்கும் வீர விக்ரம விபூஷன பதக்கம் 3 பேருக்கும் ரண விக்ரம பதக்கம் 15 பேருக்கும் மற்றும் ரண சூர பதக்கம் 51 பேருக்குமாக மொத்தம் 74 பேருக்கு இதன் போது பதக்கங்கள் சூட்டப்பட்டன.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் சாந்த கோட்டேகொட, பாதுகாப்பு பணிக்குழாம் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் உள்ளிட்ட இலங்கை விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# வளிமண்டல தூசுப்படிமங்கள் அதிகரிக்கக் கூடும்

(கொழும்பு)

கொழும்பு நகரின் வளிமண்டலத்தில் காணப்படும் தூசுப்படிமங்களின் செறிவு அதிகரிக் கக் கூடும் எனத் தேசிய கட்டட ஆய்வு நிபுணர் தெரிவித்தார்.

கொழும்பு நகரின் வளி தரக் குறியீடு தற்போது 107ஆகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த வாரம் கொழும்பு நகரின் தூசுப் படிமங்களின் செறிவு 100 சதவீதத்தால் அதிகரித்ததோடு பின்னர் வழமைக்கு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





கணித பாட ஆசிரியர்களான வி.குகநாதன் மற்றும் எஸ்.வி.பாலமுரளி ஆகியோரின் வெளியீடுகளில் ஒன்றான தரம் 7 புதிய பாடத்திட்டத்திற்கான கணிதம் நூல் வெளியீடும் அன்பளிப்பும் அண்மையில் கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிஷனில் சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி மங்கல விளக்கேற்றுவதையும் நூலின் முதற் பிரதியினை கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் பெற்றுக்கொள்வதையும் மாணவர்களுக்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நாடித்துடிப்பு

உடம்பு சரியில்லை என்று சொல்லிக்கொண்டு ஒரு வைத்தியரிடம் சென்றால் அவர் உடனே கையைப்பிடித்துப் பார்க்கிறார் எதற்கு? எவ்வளவு பணம் வைத்திருக்கிறோம் என்று தெரிந்து கொள்வதற்காகவா? அதற்காக இல்லை. நாடித்துடிப்பு எப்படி இருக்கு என்று தெரிந்து கொள்வதற்கு. உடம்பு நன்றாக இருக்கிறதா? இல்லையா? என்று அது நன்றாக காட்டி விடும்.

ஒவ்வொரு தடவையும் இதயம் சுருங்கும்போது இரத்தம் வெளியே தள்ளப்படுகிறது. அதை ஒரு நாடித்துடிப்பாக நாங்கள் உணர்கின்றோம். நாடித்துடிப்பை மணிக்கட்டில்தான் பார்க்க வேண்டும் என்று இல்லை. கழுத்திற்குப் பக்கத்தில், முழங்கால், கணுக்கால் பின்பக்கமாக இப்படி பல இடத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஒரு இடத்திற்கு இரண்டு இடமாகப் பார்த்து தெரிந்து கொள்வதுதான் நல்லது.

கையில் உள்ள இரத்தக் குழாயில் ஏதாவது தடை இருந்தால் இரண்டு கை மணிக்கட்டில் உள்ள துடிப்பிற்கும் வித்தியாசம் இருக்கும். ஒருத்தருக்கு நாடித்துடிப்பு கையில் ஒரு வித்தியாசமாகவும் காலில் ஒரு விதமாகவும் இருக்கும் என்று வைத்துக் கொள்வோம். வயிற்றுப் பகுதியில் எங்கேயோ இரத்தக் குழாயிலே (aorta) சுருக்கம் ஏற்பட்டிருக்கும் என்று அர்த்தம். சாதாரணமாக ஒரு சராசரி மனிதனுக்கு நிமிடத்தில் 72 தடவை நாடித்துடிக்கும். (normal pulse rate.. 72/min) சில சந்தர்ப்பங்களில் இது அதிகமாகும். காய்ச்சல் வந்தால் உடம்பு சூடு அதிகமானதால் அந்த சமயம் நாடித்துடிப்பு அதிகமாகும். உடம்பு உஷ்ணம் சாதராண நிலையிலேயே 98.4°F டிகிரி (NORMAL TEMPERATURE) காய்ச்சலால் இது 99.4° F டிகிரி ஆகிவிட்டால் நாடித்தடிப்பு 80 ஆகி விடும். அதாவது உஷ்ணம் 1° F அதிகமாகினால் துடிப்பு 8 எண்ணிக்கை அதிகமாகிவிடும்.


குழந்தைகளுக்கு 1 டிகிரி கூடினால் துடிப்பு 12 அதிகமாகும். பெரியவர்களை விட குழந்தைகளுக்கு நாடித்துடிப்பு அதிகமாவே இருக்கும். அதைப் பார்த்து விட்டு பயந்து விடக்கூடாது. பிறந்த சமயத்தில் குழந்தையின் நாடித்துடிப்பு நிமிடத்துக்கு சுமாராக 130. ஒரு வருடத்திற்குப் பின்பு 110. மூன்று வருடத்திற்குப் பின்பு 100. இப்படிக் குறைந்து கொண்டே வந்து விடும். எட்டு வயதில் 90. 12 வயதில் நாடித்துடிப்பு 80 இருக்கும். நாடித்துடிப்பு அதிகமாக உள்ளதா இல்லையா? என்பதை வைத்து சில காய்ச்சலைக் கண்டு பிடிக்கலாம். இப்ப உதாரணத்திற்கு மலேரியா காய்ச்சல் வந்தால் நாடித்துடிப்பு அதிகமாகும் தைபொயிட் காய்ச்சல் வந்தால் நாடித்துடிப்பு அதிகமாவதில்லை. ஒருத்தர் காய்ச்சல் என்று சொல்லிக்கொண்டு வைத்தியரிடம் வருகிறார். வைத்தியர் பார்க்கிறார். temperature 102° F அதாவது Normal ஐ விட 3.5° F அதிகமாக இருக்கும். அப்படி என்றால் pulse rate 1 டிகிரிக்கு 8 வீதம் அதிகமாக இருக்க வேண்டும். அதாவது 28 அதிகமாக இருக்க வேண்டும். அப்படி என்றால் சாதாரணமாக 72 உடன் 28 சேர்ந்தால் நாடித்துடிப்பு 100 இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். ஆனால் அப்படி இல்லை. 80, 85 தான் இருக்கிறது என்றால் அது மலேரியா இல்லை. தைபொயிட்டாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்.

Pulse இன் Rhythm கூட ரொம்ப முக்கியம். இப்போது இதைக் கவனியுங்கள். normal நாடித்துடிப்பு நிமிடத்துக்கு 72. அப்படி என்றால் ஒரு விநாடிக்கு 6 துடிப்பு. ஒருத்தர் கையைப் பார்க்கிறீர்கள். அல்லது ஸ்டெதஸ்கோப் வைத்துப் பார்க்கின்றீர்கள். முதல் ஐந்து விநாடியில் ஆறு துடிப்பு இருக்கிறது. அடுத்த ஐந்து விநாடியில் ஏழு துடிப்பு. அடுத்த ஐந்து விநாடியில் ஆறு. அடுத்த ஐந்து விநாடியில் ஏழு இப்படி வித்தியாசமாக இருக்கும் என்று வைத்துக் கொள்வோம். என்ன அர்த்தம். இதுவும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியிலே ஒரு தடவை கூடுதலாக துடிக்கும் என்று அர்த்தம். இதற்கு regularly irregular pulse என்று பெயர். ஒரு சில வகை இதே கோளாறுகளுக்கு இது ஒரு அடையாளம். regularly irregular pulse என்று ஒரு வகை. அது எப்படி என்றால் முதல் ஐந்து விநாடியில் ஆறு துடிப்பு. அடுத்த ஐந்து விநாடிக்கு பதின்மூன்று துடிப்பு.அடுத்த ஐந்து விநாடியில் ஒன்பது. அடுத்தபடியாக வெறும் இரண்டு. இப்படி ஏடாகூடமாகத் துடிக்கும்.

இப்படி இருந்தால் நிலைமை இன்னும் கொஞ்சம் கடுமை என்று அர்த்தம். நாடித்துடிப்பின் வீதமும் அமைப்பும் கூட (forman & character) சில வியாதிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவும். சாதாரணமாக ஒருவர் மூச்சு இழுக்கும் போது நாடித்துடிப்பு விரைவாகவும் மூச்சு விடுகின்றபோது மெதுவாகவும் இருக்கும். இதற்கு நேர்மாறாக இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இதயத்தை மூடி இருக்கின்ற membrane (pericardium) இலே ஏதோ நோய் என்று அர்த்தம். சில சமயம் இதயம் strong ஆகவும் வீக் ஆகவும் மதாறி மாறித் துடிக்கும். ஒரு துடிப்பு strong அடுத்தது slow! இப்படி... இருந்தால்... இதயத்தசையிலேயே (Heart Muscle) ஏதோ கடுமை disease என்று அர்த்தம். சில வைத்தியர்கள் நாடித்துடிப்பை பார்த்துக் கொண்டே Blood pressure எவ்வளவு என்று உத்தேசமாகச் சொல்லி விடுவார்கள். கொஞ்சம் அழுத்திப் பிடித்துப் பார்ப்பார்கள். Blood pressure தெரிந்து கொள்வதற்குப் பயப்படக்கூடாது.

சீனாவில் ஒரு பெரிய வைத்தியர் (Hua Tu. AD 115-205) நாடித்துடிப்பு பார்ப்பதில் கில்லாடி. நாடித்துடிப்பை மட்டும் பார்த்து விட்டு என்ன வியாதி என்று துல்லியமாக கண்டு பிடிப்பாராம். ஒரு தடவை எனக்கு ஒரு ஆசை வந்தது. வைத்தியர்கள் மாதிரி ஸ்டெதஸ்கோப்பை காதில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று. எனக்கு வேண்டப்பட்ட வைத்தியரிடம் கொஞ்ச நேரம் அதை ஓசி வாங்கி காதில் வைத்து அவருடைய நெஞ்சில் வைத்து சோதித்துப் பார்த்தேன். சாதாரணமாக பல்ஸ் ரேட் ஒரு நிமிடத்திற்கு 72 தானே இருக்க வேண்டும். அப்படி இல்லை. 60 தான் இருந்தது. என்ன வைத்தியர் உங்களுக்கே நாடித்துடிப்பு சரியாக இல்லையே என்றேன்..அவர் நிதானமாகச் சொன்னார். நீங்கள் ஸ்டெதஸ்கோப் வைத்துப் பார்க்கின்ற இடம் என்னுடைய சட்டைப்பை அதற்குள்ளே இருப்பது என்னுடைய மணிக்கூடு நிமிடத்திற்கு 60 விநாடிதானே. அந்த சத்தம் தான் நீங்கள் கேட்பது என்றார்.

# மெழுகு உருவ நூதனசாலை ஜனாதிபதியால் திறப்பு






(பொலநறுவை)

பொலநறுவை புராதன தொழில்நுட்ப நூதனசாலையுடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மெழுகு உருவ நூதனசாலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிற்பகல் திறந்து வைத்தார்.

புதிய யுகத்திற்கேற்றவாறு நூதன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மனித இனத்தின் பண்டைய தொழில்நுட்ப முறைகளைத் தற்போது வாழ்கின்ற மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும், இலங்கையின் புராதன தொழில்நுட்பதுடன் தொடர்புடைய தொல்லியல் பெறுமதிவாய்ந்த பொருட்களை சேகரித்து எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கும் நோக்கிலும் இந்த நூதனசாலை ஜனாதிபதியால் கடந்த ஜூலை மாதம் 3 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.



நூதனசாலையின் விசேட பிரிவாக நிர்மாணிக்கப்பட்ட மெழுகு உருவ நூதனசாலையானது, ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டதுடன், இப்பிரிவில் சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையில் ஆட்சி புரிந்த அரச தலைவர்களின் உருவங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவரது பதவிக் காலத்தில் வெளிநாட்டு அரச தலைவர்களிடமிருந்து பெற்ற அன்பளிப்புகள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், அப்பொருட்களை காட்சிப் படுத்துவதற்காக பொலநறுவை தொழில்நுட்ப நூதனசாலையில் நிர்மாணிக்கப்பட்ட பகுதியையும் மக்களின் பார்வைக்காக ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.





அண்மையில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் வேலைத்திட்டமான பொலநறுவை தொழில்நுட்ப நூதனசாலையின் உறுதிப் பத்திரத்தை நூதனசாலைகள் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிப்பதற்கான ஆவணங்களையும் இதன்போது ஜனாதிபதி நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சனுஜா கஸ்துரி ஆரச்சியிடம் கையளித்தார்.

வட மத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க் உள்ளிட்ட குழுவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**கடந்த 16.10.2019 அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவி**

### அமரர் செல்லத்துரை பூமணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 15.11.2019 வெள்ளிக்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:
அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக பெருந்தன்மையோடு ஏற்று சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்


யூனியன் அருகாமை,
இமையாணன், உடுப்பிட்டி

குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: 077 536 2250

(C 8217)

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

மண்ணின் மடியில்
26 - 03 - 1952



அம்பாளின் அடியில்
16 - 10 - 2019

### அமரர் சைவத்திரு காசிநாதர் சிவபாலன்

(பிரதம லிகிதர், நூலகர், எழுத்தாளர் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

"ஆயம்" மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கடந்த 42 ஆண்டுகளாக இறைபணியாற்றி 16.10.2019 அன்று இறைபதமடைந்த சைவத்திரு கா.சிவபாலன் அவர்களின் 31 ஆம் நாள் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை 15.11.2019 அன்று வெள்ளிக்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தங்கள் அனைவரையும் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதேவேளை அன்னார் நோயுற்று தெல்லிப்பளை மற்றும் யாழ்.போதனா வைத்திய சாலையில் இதய சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட வேளை சிகிச்சையளித்து பராமரித்த வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அந்தணப் பெரு மக்களுக்கும், உறவினர்களுக்கும் இரங்கலுரையாற்றியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரித்தவர்களுக்கும் மலர் மாலை அணிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும்,மரணச் செய்தியை வெளியிட்ட ஊடகங்களுக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலட்டித் தோட்டம்
இடைக்காடு

(958)

தகவல்:
மருமகன்:- ஸ்ரீறமணன்

# நேரகாலத்துடன் சென்று வாக்களியுங்கள்

## யாழ்.ஆயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)


தேர்தலில் வாக்களிப்பது ஒரு ஜனநாயக உரிமை. இந்த உரிமையை மக்கள் அனைவரும் எவரின் கட்டாயமுமின்றி தெளிந்த மனதுடனும் தீர்க்கமான முடிவுடனும் பயன்படுத்த வேண்டும். தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்றோ அல்லது தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென்றோ ஜனநாயக சூழலில் யாரையும் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது. தேர்தலைப் புறக்கணிப்பதால் இழப்படையப் போவது தேர்தலைப் புறக்கணிப்பவர்களே அன்றி வேறு யாருமல்ல.

ஒருபோதும் வெல்லமாட்டார்கள் எனத் தெரிந்தும் அவர்களை களத்தில் இறக்கி வாக்குகளை சிதறடிக்க பல வேட்பாளர்களை களமிறங்குவது இராஜதந்திரம் எனக் கருதப்பட்டாலும் இலங்கை நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்தை விரும்பாத வர்கஙின் செயற்பாடாகவே இது கருதப்பட வேண்டும். அரசியல் கட்சிகளும் ஊடகங்கள் கருத்துருவாக்கும் பணியில் ஈடுபடுவது ஏற்றுக் கொள்ளப்படலாம்.

அந்த கருத்துருவாக்கத்தில் இருந்து மக்கள் யாருக்கு வாக்களிக்கலாம் என்ற நல்ல முடிவுகளை எடுக்க உதவலாம். நேரடியாகவே இவருக்கு வாக்களியுங்கள் என்றோ அல்லது இவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்றோ வேண்டுவது சரியானதல்ல.தமிழ் மக்கள் தமது எதிர்கால வாழ்வை மிகுந்த கவனத்துடன் எடுத்து இந்த தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

தேர்தல் விஞ்ஞாபனங்கள் அநேக விடயங்களை எடுத்து சொல்லுகின்றன. எந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வெளியிடப்பட்ட விடயங்கள் ஒருபோதும் முழுமையாக நிறைவேற்றப்பட்டதாக சரித்திரம் இல்லை.

தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு நம்பிக்கை தரத்தக்க நல்ல தலைவரை இனம் கண்டு தகுதியானவருக்கு வாக்களியுங்கள் என்று தமிழ் மக்கள் அனைவருக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். இன்றுவரை தெரியப்படுத்தப்பட்ட கருத்துக்களை வைத்து நல்ல முடிவினை எடுத்திருப்பீர்கள் என்று நம்புகின்றோம். யார் இதய சுத்தியுடன் துணிவாக விடயங்களை நகர்த்துவார்கள் - பாரபட்சமின்றி தமிழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்வார்கள் என்பதை தெளிவாக கணிப்பிட்டு வாக்களியுங்கள். நேரகாலத்துடன் வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று பதற்றமின்றி நிதானமாக உங்கள் வாக்குகளை செல்லுபடியான வாக்குகளாகப் போடுங்கள்.



எந்த அசம்பாவிதமுமின்றி தேர்தல் நடைபெறவும் இலங்கை நாட்டிற்கும் குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் நல்லதைச் செய்யக்கூடிய நல்ல தலைவர் தெரிவு செய்யப்படவும் இறையாசீர் வேண்டுகிறோம் என யாழ். ஆயர் கலாநிதி யஸ்ரீன் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாளாந்த நீர்மின் உற்பத்தி 50 வீதம் வரை அதிகரிப்பு!

(கொழும்பு)

நாளாந்த நீர்மின் உற்பத்தி 50 வீதம் வரை அதிகரித்துள்ளது. மின்சக்தி மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜெயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம், இந்த வருடத்தில் உயர்மட்டத்தை அண்மித்துள்ளமையே இதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

சமனலவெள நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 100 வீதமாகவும், காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 94.6 வீதமாகவும், மவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 90.5 வீதமாகவும், கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 87.7 வீதமாகவும், விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 80.2 வீதமாகவும், ரன்தெனிகல நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 49.2 வீதமாகவும் அதிகரித்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரியின் சேவைக்கு மகாசங்கத்தினர் பாராட்டு



(கொழும்பு)

நாட்டின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அழித்துக் கொண்டிருந்த போதைப்பொருள் அச்சுறுத்தலிலிருந்து சமூகத்தை பாதுகாப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆற்றப்பட்ட உன்னத பணிக்காக மகாசங்கத்தினர் அவருக்கு ஆசி கலந்த பாராட்டுகளைத் தெரிவிப்பதாக வண. அளுத்கம பஞ்ஞாசார தேரர் தெரிவித்தார்.

அப்பாவி மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வளித்து ஆன்மீகத்தால் போஷிக்கப்பட்டு அறமிகு சமூகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் புனித திரிபீடகத்தை பாதுகாப்பது உள்ளிட்ட பௌத்த சாசனத்தின் நிலைபேற்றை முன்னிட்டு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் இன்று போன்றே என்றென்றும் போற்றப்படும் என்றும் தேரர் தெரிவித்தார்.

வண. அளுத்கம பஞ்ஞாசார தேரரின் சிறப்புரையின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து பௌர்ணமி தினங்களிலும் பிரதான விகாரையொன்றை மையமாக கொண்டு ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் சதகம் யாத்ரா ஆன்மீக நிகழ்ச்சித் தொடரின் 56ஆவது நிகழ்ச்சி இம்மாத பௌர்ணமியை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையின் அரசமரம் முன்பாக இடம்பெற்றது.

நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மாளிகையின் அரச மரத்திற்கு அருகில் வருகைதந்த ஜனாதிபதி, வழிபாடுகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து ஆன்மீக சொற்பொழிவை செவிமடுத்தார்.

ஜெயந்தி சிறிசேன அம்மையார், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் அறநெறிப் பாடசாலை மாணவர்களும் இந் நிகழ்வில் பங்குபற்றினர். (இ-7)

# தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் இதுவரை 81 பேர் கைது

(கொழும்பு)

தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் அல்லது சட்டமீறல்கள் தொடர்பாக இதுவரை 81 பேரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாளை மறுதினம் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தங்களுக்கு 208 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாடுகளில் 108 சட்டமீறல் சம்பவங்களும் 100 வேறு குற்றச்சாட்டுக்களும் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இந்திய சுற்றுலாத்துறை பிரதிநிதிகளுக்கும் வடக்கு ஆளுநருக்குமிடையில் சந்திப்பு

(சென்னை)

சென்னைக்கு இரண்டு நாட்கள் பயணம் மேற்கொண்ட வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் மற்றும் இந்திய பயண முகவர் சங்கத்தின் அகில இந்திய மற்றும் தமிழ்நாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் சென்னையில் இடம் பெற்றது.

41 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் விமான நிலையம் தற்போது சர்வதேச விமான நிலையமாக உருவாக்கப்பட்டுள்ளதுடன் சென்னைக்கான விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி தொடர்பில் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் சுற்றுலாத் துறையில் ஆர்வத்துடன் செயற்பட்டுவரும் இந்திய பயண முகவர் சங்கத்தின் பிரதிநிதிகளை வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை வளர்ப்பதற்கு உதவுமாறு ஆளுநர் இச்சந்திப்பின் போது கோரிக்கை விடுத்தார்.



தமிழ் நாட்டிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளை சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வருவது தொடர்பிலும் சுற்றுலாத் துறை மற்றும் கலாசார சமய இடங்களை இனங்காணுவது தொடர்பிலும் கவனம் செலுத்துவதாக பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பில் தேவையான நடவழக்கைகளை மேற்கொள்வதற்கு வடமாகாணம் தயாராக இருப்பதாகவும் இது தொடர்பில் ஆராய்வதற்கான தூதுக்குழு ஒன்றை வட மாகாணத்திற்கு வருமாறு ஆளுநர் அழைப்பு விடுத்தார். (இ-5-7)

# விதாதா வள நிலையத்தின் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் Computer Graphic Designing செயலமர்வானது எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவிலும் கடதாசி சார் அழகு சாதனப்பொருட்கள் தயாரித்தல் செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமையும் கையடக்க தொலைபேசி திருத்தும் பயிற்சிநெறி தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவிலும் தம்பசிட்டி பண்டாரியம்மன் கோவில் வீதியில் வடலித் தோட்டம் மாலந்தனி முருகன் கோவிலுக்கு அருகிலுள்ள அன்பு இல்லத்தில் பழைய தையல் பயிற்சி நிலையம் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தில் சதாவதானி கதிர வேற்பிள்ளை வாசிகசாலைக்கு அண்மையில் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வுகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் கலந்து பயன்பெறுமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)




மருதங்கேணி கோட்டக் கல்வில் பணிப்பாளர் ச.திரவியராஜாவின் மணிவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

(படங்கள் :-மகாலிங்கம்)

# எக்காரணம் கொண்டும் தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்கக் கூடாது

## துரைராஜசிங்கம் கூறுகிறார்

(ஏறாவூர்)

தேர்தலை எந்தக் காரணம் கொண்டும் தமிழ் மக்கள் புறக் கணிக்கக் கூடாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.


"தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோசம் முன்னர் எழுந்தது. அது எழுந்த மாத்திரத்தில் அணைந்து விட்டது. எமது பகுதிகளில் அவ்வாறான பிரசாரங்கள் இல்லை.

எமது பகுதி மக்கள் தேர்தலை எக்காரணம் கொண்டும் பகிஷ்கரிக்காமல் வாக்களிக்க வேண்டும். அதிகளவான வாக்குகளை தமிழ் மக்கள் அளிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீதிகோரி ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கடந்த காலங்களில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டி கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக நேற்று புதன் கி ழமை முன்னெடுக்கப்பட்டது. இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முதலாவது சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை வெற்றி



இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக பதுளை பொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது.

சிறுநீரக மாற்று சிகிச்சை வைத்திய நிபுணர் உதான ரட்ணபால தலைமையிலான 13 வைத்தியர்கள் இணைந்து நடத்திய சத்திர சிகிச்சை பூரணமாக வெற்றியளித்துள்ளது.

பி.எச்.எம்.இஸ்மத் என்ற 42 வயது சிறுநீரக நோயாளிக்கு சிறுநீரகங்கள் பழுதடைந்தமையால் பதுளை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிறுநீரகமொன்றை நன்கொடையாக வழங்க எம்.ரினாஸ் என்பவர் முன்வந்தார். இதற்கமைய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

# மிலேனியம் உடன்படிக்கைக்குத் தடை கோரிய மனு மீதான விசாரணை ஜனவரிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால்கள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு இடைக்கால தடை விதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மனு நேற்று புவனேக அளுவிஹார, எல்.டீ.பி. தெஹிதெனிய, மூர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகிய ஐந்து நீதியரசர்கள் அடங்கிய அமர்வில் பரிசீலிக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், சட்டத்தரணிகள் குழுமம் மற்றும் பௌத்த தகவல் மையம் ஆகியவை சார்பில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

நாட்டில் அமெரிக்க படையினரை தரையிறக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் செய்யப்படுவதாக மனுவில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் மற்றும் மக்களின் அனுமதி இன்றி, குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்றும் அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டது. (இ-7)


# கோத்தாவின் பிரஜாவுரிமை விவகாரம் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவின் இலங்கைக் குடியுரிமை தொடர்பில் கேள்விக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட மனு மீதான தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

காமினி வெயாங்கொட மற்றும் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர ஆகியோரால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது. (இ-7)

# கின்னஸ் உலக சாதனை படைக்க இலங்கை இரட்டையர்கள் முயற்சி




(கொழும்பு)

உலக நாடுகளில் உள்ள அதிகளவான இரட்டையர்களை ஒன்றுகூடச் செய்து கின்னஸ் உலக சாதனை படைக்க இலங்கையை சேர்ந்த இரட்டையர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை இரட்டையர்கள் அமைப்பின் தலைவர்களான உபுலி கமகே மற்றும் ஷமலி கமகே ஆகியோரே இவ்விதமான முயற்சியை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற இரட்டையர்கள் அமைப்பின் கூட்டத்தில் வைத்து இவர்கள் கருத்துரைக்கையில்,

இலங்கை இரட்டையர்கள் அமைப்பினை சர்வதேச அளவிற்கு கொண்டு செல்லும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி பிரமாண்டமான மாநாடொன்றை நடத்த தீர்மானித்துள்ளோம்.

இலங்கை இரட்டையர்கள் அமைப்பின் 28 ஆயிரம் உறுப்பினர்களோடு, உலக நாடுகளில் உள்ள இரட்டையர்களையும் இலங்கைக்கு அழைத்து இந்த மாநாட்டை நடத்தவுள்ளோம்.

இதன்மூலம், அதிக அளவில் இரட்டையர்களை ஒன்றுகூடச் செய்து கின்னஸ் உலக சாதனை படைக்க திட்டமிட்டுள்ளோம் என தெரிவித்தனர்.

இதேவேளை , குறித்த இரட்டையர்கள் அமைப்பானது இலங்கையில் கடந்த 1993 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் க. கலியுகன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் முகாமைத்துவ விரிவுரையாளர் திருமதி. சிவானி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக குருநகர் பங்குத்தந்தை அருட்திரு சாள்ஸ் ஜஸ்ரின் அடிகளார், கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் சமுர்த்தி உயர் முகாமையாளருமாகிய கியூமன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: குருநகர் செய்தியாளர்)

# தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம்;

# மூவரை அரச சாட்சியாக்க சட்டமா அதிபர் திட்டம்





**(கொழும்பு)**

**கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 தமிழர்களை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னகொட, முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க உள்ளிட்ட 14 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ள நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட மூவருக்கு பொதுமன்னிப்பளித்து அவர்களை வழக்கின் அரச சாட்சிகளாகப் பயன்படுத்த சட்டமா அதிபர் திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது.**

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளதாக அத்திணைக்களத்தின் உயர் மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

வெள்ளை வானில் 11 பேரைக் கடத்திச் சென்று கப்பம் பெற்று காணாமல் ஆக்கியமை தொடர்பிலான நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டமை தொடர்பில் 16 சந்தேக நபர்கள் சி.ஐ.டி யால் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னகொட கைது செய்யப்படாத போதும் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டார். அதன்படி நீதவான் நீதிமன்ற அறிக்கைகளின் பிரகாரம் சந்தேக நபர்களின் எண்ணிக்கை 17 ஆகும். இந்நிலையிலேயே அவர்களில் மூவரை, அவர்கள் இக்குற்றச் செயல்களின் குற்ற உதவியாளர்களாக இருந்துள்ளதை வைத்து பிரதான பிரதிவாதிகளுக்கு எதிரான சாட்சியாளர்களாகப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கடந்த 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 17 ஆவது சந்தேக நபரான கடற்படைச் சிப்பாய் அலுத்கெதர உப்புல் பண்டார பிரதான அரச சாட்சியாகப் பயன்படுத்தப்படவுள்ளார். அவரே கன்சைட் முகாமில் குறித்த கடத்தப்பட்டவர்கள் இருந்த போது வீட்டாருடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள உதவியதாக விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனைவிட லக்ஷ்மன் உதய குமார மற்றும் தம்மிக தர்மதாஸ ஆகிய இரு கடற்படை உளவுப் பிரிவின் உத்தியோகத்தர்களையும் அரச சாட்சியாகப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, அட்மிரல் ஒப் த ப்லீட் வசந்த கரன்னகொட, சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்த லெப்டினன் கொமாண்டர் சம்பத் முணசிங்க, கன்சைட் நிலத்தடி இரகசிய வதை முகாமின் பொறுப்பாளராக அப்போது இருந்த லெப்டினன் கொமாண்டர் தரத்தையுடையவரும் தற்போது கொமாண்டராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளவருமான சுமித் ரணசிங்க, கடற்படைப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நலின் பிரசன்ன விக்கிரமசூரிய, கித்சிறி மற்றும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாளராகவும் அப்போது பதவி வகித்த கொமாண்டர் டி.கே.பி. தஸநாயக்க, கடற்படை வீரர்களான கஸ்தூரிகே காமினி, அருணதுஷார மெண்டிஸ் மற்றும் நேவி சம்பத் எனும் லெப். கொமாண்டர் ஹெட்டியாரச்சி, சஞ்ஜீவ பிரசாத் திலங்க சேனாரத்ன, அண்ணாச்சி எனப்படும் உபுல் சமிந்த, ஹெட்டி ஹெந்தி, என்டன் பெர்னாண்டோ, சம்பத் ஜனக குமார ஆகிய 14 பேர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.


இதனை விசாரிக்க சிறப்பு ட்ரயல் அட்பார் கோரப்பட்டுள்ள நிலையில் விரைவில் அதற்கான நியமனம் கிடைக்கப் பெறும் என நம்பப்படுவதாக சட்டமா அதிபர் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1887

Search for people, places and things

### வாமன்

**வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் நல்ல நண்பர்கள் தேவை. வாழ்நாள் முழுவதும் வெற்றிபெறவேண்டுமானால் ஒரு எதிரியாவது தேவை**



### ராணி

**வாழ்க்கையில் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் உங்களுக்கான நிமிடங்களை ரசிக்கத் தவறாதீர்கள்**



### விதுஷன்

**நாம் மட்டும்தான் ஒழுக்கம் மற்றவர் எல்லாம் திருத்தப்பட வேண்டியவர் என்று நினைப்பது முகத்தில் உள்ள அழுக்கை கழுவாமல் முகம் பார்க்கும் கண்ணாடியைக் கழுவுவது போலாகும்**



### சுமிதா

**செல்வம் என்பது பணம் மட்டும்தான் என்பது இல்லை. உனக்குள் இருக்கும் திறமையே. அதை நீ வளர்த்துக் கொண்டால் அதுவும் ஒரு செல்வம் தான்**




### குமார்

**காதலித்துப் பார் அவள் பெயர் உனக்கு Password ஆகும், அவள் Follow list கூடினால் உன் முகம் வாடும்... அவள் புது Followers யார் என உன் மனம் தேடும் அவள் Online இல் இருக்கும் போது உன் இரவும் நீளும்**




### வெண்ணிலா

**எதை வேண்டுமானாலும் விட்டுக்கொடு. ஆனால் அது யாருக்காக என்பதில் மட்டும் கவனமாய் இரு**



**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# அயோத்தி தீர்ப்பு; அமைதியும் நீதியும்



இரத்தம் குடிக்க நினைத்த சக்திகள் ஏமாந்து போய்விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். அயோத்தி விவகாரத்தில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு அளித்த 1,045 பக்கத் தீர்ப்பில் மிகப் பாராட்டப்பட வேண்டிய விடயம் - அது இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இருதரப்பையுமே வரவேற்கச் செய்திருக்கிறது.

இந்தத் தீர்ப்பு எந்தவொரு தரப்புக்கும் முழுமையான பாதகமாக இருந்திருந்தாலும் அதைத் தொடர்ந்து தேசத்தின் அமைதியை ஒட்டுமொத்தமாகக் குலைக்கக்கூடிய விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கும்.

அவ்வாறு இல்லாமல் இரு தரப்புக்குமே ஒரு பரிகாரமாக இந்தத் தீர்ப்பு அமைந்திருப்பதை மத அமைப்புக்கள் மட்டுமன்றி, அரசியல் கட்சிகளும் வெளியிட்டிருக்கும் அறிக்கைகளிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.வரலாறு, மத நம்பிக்கை, அடிப்படை ஆத்தாரங்கள் ஆகியவற்றையெல்லாம் தாண்டி, நீண்டதொரு காலமாகப் புகைந்துகொண்டிருந்த வெடி குண்டை மிக நுட்பமாகக் கவனித்து அணைத்திருக்கிறது இந்தத் தீர்ப்பு. கிட்டத்தட்ட 3 தசாப்தங்களாக இந்தியாவுக்குள் இடை விடாமல் அரங்கேறிவந்த மதப் பிரிவினைவாதச் செயற்பாடுகளை அப்படியே கருத்தில் எடுத்துக்கொண்டு, அதற்கான பதிலடியாக இந்தத் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

அதேசமயம், மதச்சார்பற்ற இந்திய மனப்பான்மையின் மீது தாக்குதல் நிகழ்த்திய சம்பவங்களைக் குறித்த கண்டனத்தை யும் நன்றாகவே பதிவு செய்திருக்கிறது. டிசெம்பர் 6, 1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட அதிர்ச் சிகரமான நிகழ்வு மற்றும் அதே டிசெம்பர் 6 ஆம் திகதியைப் பின்னாளில் அஞ்சத்தக்க ஒரு நாளாக மாற்றி, குண்டுவெடிப்புகளில் இறங்கிய நிகழ்வுகள் ஆகியவைதான் அவை. இந்தத் தீர்ப்பு வேறு எந்தவிதமாக வழங்கப்பட்டிருந்தாலும் அதை வைத்து வன்முறைச் செயல்களைத் தூண்டிவிட்டு, அதைத் தமக்கு சாதகமாக்கிக்கொள்ள இந்தியாவின் உள்ளேயும் வெளியேயும் சில சக்திகள் காத்திருந்தன என்பதையும் மறுக்க முடியாது. அதைத் தீவிரமாகக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நாடு முழுவதும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு கண்காணித்ததோடு, அமைதியைச் சீர்குலைக்கும் சக்திகள் எதுவும் ஆட்டம் போடாதபடி துல்லியமான புலனாய்வின் மூலம் தெளிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்த வகையில் மத்திய அரசையும் பாராட்டத்தான் வேண்டும்.

இந்தத் தீர்ப்பைப் படித்துப் பார்க்கும்போது, நடந்து முடிந்த வரலாற்றுத் தவறைத் திருத்து வது எத்தனை முக்கியமோ, அதேயளவுக்கு நிகழ்காலம் மற் றும் எதிர்காலத்தின் அமைதி யையும் கருத்தில் கொள்வது முக்கியம் என்பதை உச்ச நீதி மன்றம் கருத்தில் கொண்டிருப்பது புரிகிறது.

1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட நிகழ்வும், அதன் பிறகு நிகழ்ந்த குண்டுவெடிப்புகளும் மதத்துக்கு அப்பாற்பட்ட இந்தியச் சிந்தனையின் மீது பேரிடிகளாகவே விழுந்தன. இந்தியாவின் சமூக நல்லிணக்க இதயத்தில் ஆழமான ஒரு புண்ணை இந் நிகழ்வுகள் தோற்றுவித்தன.

சட்டபூர்வமாகத் தீர்ப்பை அணுகும் எவருக்கும், பாபர் மசூதியில் நடந்த அத்துமீறல் தாக்குதல்களைக் கண்டித்த உச்ச நீதிமன்றம், அதேசமயம் தன் தீர்ப்பில் கோயிலுக்கும் மசூதிக்கும் குறிப்பிட்டிருக்கும் இடங்கள் அந்த அத்துமீறல்களின் பின்னணியிலிருந்த நோக்கத்துக்கு அங்கீகா ரம் கொடுப்பதுபோல அமைந்திருக்கிறதே என்ற முரண் தரும் ஏமாற்றம் ஏற்படலாம்.

மனுதாரர்கள் இரண்டு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிவித்துவிட்டு, ஒரு தரப்பால் மேற்கொள்ளப்பட்டவன் முறையை மட்டும் அப்படியே கடந்து சென்றுவிட முடியாது. அவர்கள் தண்டிக்கப்படுவது தான் வன்முறை வழியே எல்லாவற்றையும் தீர்மானித்துவிடலாம் என்று செயல்படுவோருக்குக் குறைந்தபட்சமேனும் விடுக் கப்படும் எச்சரிக்கையாக இருக்க முடியும். தீர்ப்பை எதிர்த்து சீராய்வுக்குச் செல்லும் வாய்ப்பைப் புறக்கணிக்கும் முடிவை நோக்கி முஸ்லிம் சமூகம் நகர்ந்திருப்பதை, இந்த நாட்டின் அமைப்புகள் மீதும், அரசியல் மீதும், ஜனநாயக விழுமியங்கள் மீதும் அவர்கள் கொண்டிருக்கும் நல்லெண்ணத்தின் பிரதிபலிப்பாகப் பார்க்க வேண்டும். கூடவே, கடந்த காலத்தின் களைகளை அறுத் தெறியும் துணிவாகவும் நாம் கருதலாம்.

அதேசமயம், இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டமான கொண்டாட்டங்கள் எதையும் நிகழ்த்தாமல் தவிர்த்ததன் மூலம், முஸ்லிம் சமூகத்தின் மனம் எந்தவகையிலும் புண் பட்டுவிடக் கூடாது என்பதில் இந்து சமூகம் காட்டிய நிதானத்தையும் கவனத்தில் கொள்ள வேண் டும்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதையும், மீண்டும் ராமர் கோயில் கட்டுவதையும் ஆளுங்கட்சி மற் றும் எதிர்க்கட்சிகள் தேர்தல் அரசியலுக்காக மீண்டும் மீண்டும் ஆயுதமாகப் பயன்படுத்தி வந்த நிலை இனி இருக்காது. ஒரு நல்லிணக்கமான எதிர்காலத்தை மனதில் கொண்டு 5 நீதிபதிகளும் வழங்கியிருக்கும் இந்த ஒருமித்த தீர்ப்பை அனைத்து அரசியல் கட்சிகளுமே பொறுப்போடு புரிந்து கொண்டு, இப்போது காட்டும் இதே நிதானத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். நீதிபதிகளின் நல்லெண்ணமும் நம்பிக்கையும் வீண் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக, இந்துத்துவம் என்ற ஆயுதத்தை பா.ஜ.கவும் சங்கப் பரிவாரங்களும்வன் முறைக்கான தூண்டுகோலாக இனியும் பயன்படுத்தக் கூடாது. அதேபோல், போலி மதச்சார் பின்மை என்ற கொள்கையிலிருந்து விடுபட்டு, எல்லா மதங்களையும் ஒன்றுபோல் பார்க்கிற பக்குவத்தை எதிர்க்கட்சிகளும் பெறவேண்டும். நாளைய இந் தியா வேண்டுவது - அமைதியையும் வளர்ச்சியையும்தான். அதை எந்த ஒரு மதத்தை ஆதரிப்பதிலிருந்தோ எதிர்ப்பதிலிருந்தோ பெற்றுவிட முடியாது என்பது நிதர்சனம். அயோத்தியிலிருந்து அமைதி பரவட்டும்'

**த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

# இதுவரை 3729 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 3700 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த மாதம் 8 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் வரை 3729 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 27 முறைப்பாடுகளும் மற்றும் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 3596 முறைப்பாடுகளும் அடங்குவதாக சுட்டிக் காட்டப்பட்டடுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 102 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவை அனைத்தும் தேர்தல்கள் விதி மீறல்கள் தொடர்பில் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## கோர விபத்தில் சிக்கி இளைஞன் உயிரிழப்பு

(கிரியுல்ல)

பன்னல- கிரியுல்ல வீதி மெத்சிறி சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

அத்தோடு ஒருவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கிரியுல்லயிலிருந்து பன்னல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று ஆட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மத்தியஸ்த சபை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் காரணமாக கரவெட்டி மத்தியஸ்த சபை அமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற மாட்டாது. அதற்குப் பதிலாக 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதேவேளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோன்று நடைபெறவுள்ளது என கரவெட்டி மத்தியஸ்த சபைத் தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (இ)

## இயக்குநர் பாரதிராஜாவுடன் ஆளுநர் ராகவன் சந்திப்பு



(சென்னை)

பாரதிராஜா சர்வதேச திரைப்பட பயிற்சிக் கல்லூரிக்கு வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் விஜயம் செய்து இயக்குநர் பாரதிராஜாவுடன் கலந்துரையாடினார்.


வடமாகாணத்தில் திரைப்படத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பாரதிராஜா சர்வதேச திரைப்படப் பயிற்சிக் கல்லூரியூடாக திரைக்கலை பயிற்சியை வழங்குமாறு ஆளுநர் ராகவன் இயக்குநர் பாரதிராஜாவிடம் கோரிக்கை விடுத்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 120 | 110 | 140 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 220 | 280 | 160 | 300 |
| தக்காளி | 100 | 120 | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 | 80 |
| கோவா | 140 | 140 | 140 | 110 | 160 |
| கரட் | 200 | 200 | 200 | 220 | 320 |
| பூசணி | 60 | 80 | 50 | 70 | 100 |
| புடோல் | 100 | 80 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 80 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 120 | 180 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 30 | 80 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 140 | 100 | 130 | 160 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 140 | 300 |
| பீற்றூட் | 200 | 100 | 160 | 70 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 240 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 300 | — | 320 |
| போஞ்சி | 140 | 150 | 120 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 100 | 80 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 40 | 50 | 50 |
| தேசிக்காய் | 250 | 200 | 150 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 30-40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 350 | — | 300 | 150 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 160 | 120 |




# அம்மா சொல் கேள்



செழிப்பான ஒரு புல் வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக்கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான்.

புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக் குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த் தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஓர் ஆட்டுக்குட்டி, “உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டது.

ஓநாயும் “நண்பா, நண்பா... இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக் கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை..” என்று வருத்தத்துடன் கூறியது.

“அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமி சத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார் களே?” என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி.

“சேச்சே... அதெலாம் சுத்தப் பொய்!” என்றது ஓநாய்.

“அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப்பிட்டுவிட்டு, ப்ரெண்ட்ஸாக ஜாலியாகச் சுற்றலாம்!” என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று.

“உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அந்த ஆட்டுக் குட்டிக்குத் தானாகத் தெரியவில்ல்லை. அது போகட்டும், பரவாயில்லை... அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த, தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?

## பழமொழிகள்

- நடந்தால் நாடெல்லாம் உறவு , படுத்தால் பாயும் பகை.
- நாய்க்கு வேலையில்லை, நிற்க நேரமும் இல்லை.
- தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.
- கோடி கொடுப்பினும் குடில் பிறந்தார் தம்மோடு கூடுவதே கோடி பெறும்.
- பக்கச் சொல் பதினாயிரம்.
- ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலம் தரும்.
- சர்க்கரை என்றால் தித்திக்குமா?
- நன்மை கடைப்பிடி.
- எழுதி வழங்கான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்.
- முருங்கை பருத்தால் தூணாகுமா?
- கடித்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை.
- கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?
- அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா?
- போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
- கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
- பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும் புகழ் ஆபரணமே பெரிது.
- தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்காதே.
- சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா?
- சுடினும் செம்பொன் தன்னொலி கெடாது.
- நித்தம் போனால் முத்தம் சலிக்கும்.
- அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான்.
- மனதிலிருக்கும் இரகசியம் மதி கேடனுக்கு வாக்கிலே

## பொது அறிவு வினாவிடைகள்

பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்? - 330

உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது? - நெதர்லாந்து.

உலகின் மிகச் சிறிய சந்து எது? - புனித ஜான் சந்து. ரோமில் உள்ளது. 48 செ.மீ. அகலம்.

உலகிலேயே அதிக மழை பெறும் இடம் யாது? - சீராப்புஞ்சி

உலகிலேயே மிக நீளமான மலை எது? - அந்தீஸ்மலை

உலக அமைதிக்கான நோபல் பரிசு யாரால் சிபாரிசு செய்யப்படுகிறது ? - நோர்வே அரசு

கிரெடிட் கரட் வழங்கிய முதல் இந்திய வங்கி எது? - சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா.

உலக இரத்த தான தினமாக கருதப்படும் நாள் எது? - அக்டோபர் 1

உலகின் இரண்டாவது நீளமான் கடற்கரையான மெரினாவை வடிவமைத்து
பெயர் சூட்டியவர் யார்? கிரண்ட்டப்

மனித ரத்தத்தை ஏற்றுமதி செய்வதில் முன்னணி வகிக்கும் நாடு எது? - அயர்லாந்து

முகர்ந்து பார்த்தால் வாடிவிடும் மலர் எது? - அனிச்சம்

உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு எது? - சுவீட்சர்லாந்து

மழையின் அளவை கணக்கிட உதவும் கருவி எது? - ரெயின் கேஜ்

பூனையின் கண்பார்வை மனிதனைவிட எத்தனை மடங்கு கூர்மையானது? எட்டு
உலகில் மொத்தம் எத்தனை வானிலை ஆராய்ச்சி மையங்கள் உள்ளன? - 12.500

உலகிலேயே மிகவும் பெரிய தேசியக்கொடி கொடி கொண்ட நாடு எது? - டென்மார்க்

கடல்களின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது ? - இங்கிலாந்து

உலகின் இரண்டாவது பெரிய சிகரம்? - மவுண்ட் காட்வின் ஆஸ்டின்(8611 மீற்றர்கள்)

எந்த நாடுகளின் தேசிய கொடியில் சூரியன் உள்ளது? - அர்ஜென்டீனா மற்றும் உருகுவே

## பாட்டியம்மா கடையிலே



பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயில
பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயிலே
நரி அண்ணா வந்தாராம்
பாட்டுப்பாட சொன்னாராம்
நரி அண்ணா வந்தாராம்
பாட்டுப்பாட சொன்னாராம்
வடை கீழே விழுந்ததாம்
நரி தூக்கி சென்றதாம்
பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயிலே

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினை களுக்கும் தீர்வு காணத் தூண்டும் !

– தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இறைவா ஒரு விண்ணப்பம் நீயும் வாக்களித்து உதவு!

ஜனாதிபதித் தேர்தல் நாளை மறுதினம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தலை செம்மையாக நடத்தி முடிப்பதில் தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தல் திணைக் களம் சார்ந்த உத்தியோகத்தர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபடுவோரும் அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகின்றனர்.

இதேவேளை தேர்தல் பிரசாரங்கள் அனைத் தும் 13ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் முடிவுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோரும் அவர்களை ஆதரிப்பவர்களும் பொதுமக் களை நோக்கி எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுள்ளனர்.

இதற்காக எத்தனையோ விடயங்களை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இனி தீர்ப்பு வழங்குகின்றவர்கள் வாக்கா ளப் பெருமக்கள்.

அவர்கள் தமது அறிவுக்கும் சிந்தனைக் கும் மனச்சாட்சிக்கும் அமைவாக தங்களின் வாக்குகளை வழங்குவர்.

இங்கு தீர்ப்பு வழங்குகின்ற ஒவ்வொரு வரின் சிந்தனையும் விருப்புகளும் வேறுபட்ட வையாக இருக்கலாம். வேறுபட்ட தெரிவு களாக இருக்கலாம்.

ஆனால் அனைத்து வாக்காளர்களும் ஒரு விடயத்தை சிந்திக்க வேண்டும்.

அதாவது இலங்கைத் திருநாட்டில் ஜனநாய கத்தைப் பாதுகாக்கவும் ஜனநாயகத்தை செழுமைப்படுத்தவும் எனது வாக்குப் பயன்பட வேண்டும் என்பதே அந்தச் சிந்தனையாகும்.

அதேநேரம் வாக்களிப்பது எனது ஜன நாயக உரிமை. எனது வாக்கு பெறுமதியானது. எனவே எனது ஜனநாயக உரிமையை நான் சரியாகவும் செம்மையாகவும் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வோடும் வாக்காளப் பெருமக்கள் செயற்பட வேண்டுமென்ற கோரிக் கையை இவ்விடத்தில் முன்வைக்கலாம்.

இங்கு அதிக வாக்குகள் பெறுகின்றவரே வெற்றி பெற்றவராகத் தீர்மானிக்கின்ற நடை முறையில், வெற்றி பெற்றவர் நல்லவர், சிறந் தவர் என்றோ அல்லது தோற்றவர்கள் நல்ல வர்கள் அல்ல என்றோ பொருள்பட மாட்டாது.

மாறாக அவரவர் கையாண்ட நுட்பங்களும் தந்திரோபாயங்களும் தேர்தல் வெற்றியில் பங்களிப்புச் செய்யும் என்பதால், இச்சிறியேன் இறைவனிடம் ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக் கிறேன்.

இறைவா! மக்கள் நிம்மதியாக வாழ்வதற் காக, நாட்டில் ஜனநாயகப் பண்பு சிறப்புறு வதற்காக, வறுமை நீங்கி எல்லா மக்களும் இன்புற்று வாழ்வதற்காக யார் ஜனாதிபதியாக வரவேண்டுமென நீ நினைக்கின்றாயோ அவ ருக்கு நீயும் வாக்களித்து உதவி செய்.

மக்களின் வாக்கோடு உன் வாக்குச் சேர்ந் தால் உள்ளதற்குள் நல்லது கிடைக்குமல் லவா?

இறைவா! உதவி செய். இதுவே எம் வேண்டுதல்

# ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 3,043 நடமாடும் பொலிஸ் சேவைகள்

## பொலிஸ் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள 12 ஆயிரத்து 856 வாக் களிப்பு நிலையங்களுக்காக ஒரு வாக்களிப்பு நிலையத் திற்கு 2 அதிகாரிகள் வீதம் கடமையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர்.

இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள இரு வர்களுள் பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்களு க்கு 2 ஆண் அதிகாரிகள் வீத மும் சில வாக்களிப்பு நிலை யங்களுக்கு பெண் அதிகா ரிகள் மற்றும் ஆண் அதி காரிகள் என்ற ரீதியிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர். இதற்கு அமை வாக 12 ஆயிரத்து 856 வாக் களிப்பு நிலையங்களுக்கு கடமையில் ஈடுபடுத்தப்பட வுள்ள மொத்த பொலிஸா ரின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 712 ஆகும். அனை த்து வாக்களிப்பு நிலையங் களையும் உள்ளடக்கும் வகையில் நாடு முழுவதி லும் 3,043 நடமாடும் பொலிஸ் சேவைகளும் இடம்பெற வுள்ளது.

ஒரு நடமாடும் சேவையில் விசாரணை தரத்திலான ஒரு அதிகாரியும் (துணை பொலிஸ் பரிசோதகர் அல் லது பொலிஸ் பரிசோதகர் என்ற ரீதியில்) பொலிஸ் சார்ஜன் அல்லது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றும் சிவில் பாதுகாப்பு ஊழியர்கள் இருவர் என்ற வீதம் கடமைகளில் ஈடுப டுத்தப்படவுள்ளனர்.

இதற்கமைவாக பொலிஸ் நடமாடும் சேவைக்காக நாடு முழுவதிலும் கடமை யில் ஈடுபடவுள்ள பொலிஸா ரின் எண்ணிக்கை 6,086 ஆகும். இதற்கு மேலதிக மாக நடமாடும் பாதுகாப்பு சேவையும் நாடு முழுவ திலும் இடம்பெறவுள்ளது. இவற்றில் ஈடுபடவுள்ள சிவில் பாதுகாப்பு பிரிவினரின் எண்ணிக்கை 6,086 ஆகும். சம்பந்தப்பட்ட தொகுதி பொறுப்பதிகாரிகளின் அறி க்கைக்கு அமைவாக வாக் குகள் எண்ணப்படும் மத் திய நிலையங்களின் எண் ணிக்கை 43 ஆகும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சா ளரும் பொலிஸ் அத்தியட்ச கருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாக்குகள் எண்ணும் மத்திய நிலையம் ஒன்றிற் காக சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவரும் (சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்லது பொலிஸ் அத்தியட்சகர்) ஒருவர் கடமையில் ஈடுபடு வார். இதற்கு மேலதிகமாக விசாரணை தரத்திலான 5 அதிகாரிகளும் 5 பொலிஸ் சார்ஜனும் 40 பொலிஸ் கான்ஸ்டபிளும் வாக்குகள் எண்ணப்படும் மத்திய நிலை யத்திற்காக பாதுகாப்பு நட வடிக்கைகளில் ஈடுபடவுள் ளனர். ஜனாதிபதித் தேர்தலு க்கு அமைவாக எதிர்வரும் சில தினங்களில் கலகம் அடக்கும் பணிகளில் 153 குழுக்கள் நாடு முழுவதிலும் அமைக்கப்படவுள்ளன.

54 முழு அளவிலான கலகம் அடக்கும் குழுக்களும், 99 ஓரளவு கலகங்களை அடக்கும் குழு என்ற ரீதியி லும் கடமையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர். இதற்காக ஒரு முழுமையான கலகம் அட க்கும் குழுவிற்காக விசாரணை தரத்திலான ஒரு அதிகாரி யும், பொலிஸ் சார்ஜன் ஒரு வரும், 8 பொலிஸ் கான்ஸ்ட பிள்களும் ஈடுபடுத்தப்படு வர். இதேபோன்று ஓரளவி ற்கு கலகங்களை அடக்கும் குழுவிற்கு விசாரணை தரத் தில் ஒரு அதிகாரியும் பொலிஸ் சார்ஜன் ஒருவரும், 5 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் என்ற ரீதி யிலும் கடமையில் ஈடுபடுத் தப்படுவர்.

இதற்கு அமைவாக 153 கலகங்களை அடக்கும் குழுவிற்காக 1,233 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர். இதுவரையில் நாடு முழுவதிலும் ஸ்தாபிக் கப்பட்டுள்ள 137 பொலிஸ் வீதி தடைகளுக்கு மேலதிக மாக ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாட்டில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேலதிக மாக 190 வீதித் தடைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிரந்தர வீதி தடைகள் 137 இற்காக ஒரு வீதித் தடைக்கு விசாரணை தரத்தில் அதிகாரி ஒருவரும் பொலிஸ் சார்ஜன் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என்ற ரீதியிலும் கடமையில் ஈடுப டுத்தப்படவுள்ள்னர். இதற்கு மேலதிகமாக 190 பொலிஸ் வீதித் தடைகளுக்காக ஒரு வீதித் தடைக்கு விசாரணை தரத்திலான அதிகாரி ஒருவ ரும் பொலிஸ் சார்ஜன் ஒருவ ரும், 4 பொலிஸ் கான்ஸ்ட பிள்களும் சிவில் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் வீதமும் கடமையில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர்.

இதற்கமைவாக மொத்த வீதித் தடைக்கான கடமை யில் ஈடுபடவுள்ள பொலி ஸாரின் எண்ணிக்கை 1,688 ஆகும். இந்த வீதித் தடைக் காக கடமையில் ஈடுபடவுள்ள சிவில் பாதுகாப்பு ஊழியர் களின் எண்ணிக்கை 190 ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சகல வைத்தியசாலைகளுக்கும் ரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள்

(களுத்துறை)

நாட்டிலுள்ள சகல வைத் தியசாலைகளுக்கும் அடுத் தாண்டு ரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப் படும் என்று சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய வைத்தியத்துறை அமை ச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன் றில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை பத்தா யிரத்து 500 இற்கும் அதிக மான ஸ்டென்கள் வழங் கப்பட்டன. இதன் மூலம் பைபாஸ் எனப்படும் சத்திர சிகிச்சைக் குட்படுத்தப் பட்டவர்களுக்கு பாரிய நன்மை கிடைத்துள்ளதா கவும் அமைச்சர் தெரி வித்தார். (இ-7)

# கடந்த 10 மாதங்களில் 21 யானைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

2019ம் ஆண்டின் ஜன வரி முதலாம் திகதியிலிரு ந்து ஒக்டோபர் 31ஆம் திகதி வரையான பத்து மாத காலப் பகுதியினுள் வடமேல் வன விலங்கு வலயத்தில மட்டும் 21 காட்டு யானைகள் உயிரி ழந்தன.

அத்தோடு, காட்டு யானை களின் தாக்குதல்களால் 9 பேர் பலியாகியுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்தது.

புகையிரதங்களில் மோதல், துப்பாக்கிச் சூட் டுக்கு இலக்காதல், மின்சார வேலியில் சிக்கல் மற்றும் வெடிகளை உண்ணல் போன்ற காரணங்களால் இவ்வாறு காட்டு யானை கள் உயிரிழந்ததாக அத் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நான் எப்போதும் சோம்பல் இல்லாமல் கர் மத்தை, கடமையைச் செய்து கொண்டிருக்கா விட்டால் மக்கள் எல்லாவகையிலும் என் வழியையே பின்பற்றுவார்கள். நான் கர்மத்தை செய்யாமல் இருந்து விட்டால் இந்த உலகம் அழிந்து போகும். -பகவத்கீதை

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய
பழமரங்களைக் கேட்டுப்பார்
உனது பரம்பரையின் கனவுகளை
இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்"

–கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

## சத்திய தரிசனம்

### இறுதி வரைக்கும் போராடு



❖ மனித மனத்தை சீர்படுத்தி தூய்மை ஆக்காவிட்டால், உலகை சீர்படுத்த எடுக்கும் திட்டங்கள் அனைத்தும் பயனற்றதாகி விடும்.

❖ கடவுள் கொடுப்பதை அழிக்கமுடியாது. மனிதன் கொடுப்பதை பாதுகாக்க முடியாது.

❖ தன் கடமையைச் சமுதாயத்திற்கு வெளிக்காட்ட மட்டுமே மனிதன் முயற்சிக்க வேண்டும்.

❖ தன்னம்பிக்கையே கடவுள் நம்பிக்கைக்கு அடிப் படையாகும்.

❖ சந்தேகப்படுவது எளிது. நம்பிக்கை கொள்வது கடினமானது.

❖ கடவுளின் உதவியையும் அரவணைப்பையும் விரும்பும் மனிதன், முதலில் தன்னை தூய்மைப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

❖ குற்றம் செய்வது இயற்கையானது என்று எண்ணுவதே பெரிய குற்றமாகும்.

❖ ஆசிரியர் சொல்வதைப் பின்பற்று, தீமையை எதிர் கொள், இறுதிவரை போராடு, விளையாட்டை ரசித்து முடி.

## மாவட்ட ரீதியான சமபோஷா கிண்ணம்

# புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி அணிவசம்!




மன்னார் மாவட்ட 16 வயது பிரிவினருக்கான பாடசாலைகளுக்கிடையிலான "சம்போஷா" வெற்றிக்கிண்ண கால்பந்தாட்ட தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி அணியை எதிர்த்து பள்ளிமுனை சென்.லூசியா மகா வித்தியாலய அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல்கணக்கில் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனானது.

இவ் அணி சார்பாக அபிஷேக் 02 , சுகிலன், அபிசன் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்று கொடுத்தனர்.

இப் போட்டியின் சிறந்த வீரராக அபிசனும், சிறந்த பின்கள வீரராக சுகிலனும் சிறந்த கோல் காப்பாளராக றொக்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது

# பலாலி விண்மீன் அணி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக யூட் கெனடி தெரிவு செய்யப்பட்டார். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது வலைப்பாடு ஜெகமீட்பர் அணி



IOM நிறுவனத்தின் அனுசரணையில் உருத்திரபுரம் சனசமூக நிலையம் நடத் திய உதைபந்தாட்ட தொடரில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து ஜெயந்திநகர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 06:01 என்ற கோல் கணக்கில் ஜெகமீட்பர் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

இத் தொடரின் நாயகனாக நீயூட்சனும் சிறந்த கோல் காப்பாளராக அனுஜனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# கலைமதி அணியை வென்று இறுதிக்குத் தெரிவானது டைமன்ஸ்



அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பதிவு செய்தமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் டைமன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார். (க)



# வென்றது சிறைச்சாலைகள் அணி போராடி தோற்றது ஞானமுருகன்

FA கிண்ண தொடரில் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து இலங்கை சிறைச்சாலைகள் அணி மோதியது.

ஆட்டத்தின் முதலாவது கோலை ஞானமுருகன் அணி பெற்றுக் கொண்டது. எனினும் தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் சிறைச்சாலைகள் அணி இரு கோல்களை பெற்று கொள்ள ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் சிறைச்சாலைகள் அணி வெற்றி பெற்றது. ஞானமுருகன் அணி சார்பாக பவித்திரன் ஒரு கோலைப்பெற்று கொடுத்தார்.

இலங்கை சிறைச்சாலைகள் அணியில் வடக்கினை சேர்ந்த கஜகோபன், வின்சன் ஆகிய வீரர்கள் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## காங்கேசன்...

யிலீடுபட்ட புகையிரதம் யாழ்ப்பாணம் நீராவியடி, பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையைக் கடந்த சமயத்தில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையைக் கடக்க முயன்ற வேளையில் புகையிரதத்துடன் மோதுண்டு படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்து சென்றபோது சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்திருந்தார்.

சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த ஊரவர்கள், புகையிரதக் கடவைக்குக் குறுக்காகத் தடைகளை ஏற்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதிப் புகையிரதம் தொடர்ந்து பயணிக்க முடியாமல் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் ஸ்தம்பித்தது.

சம்பவ இடத்துக்கு புகையிரத திணைக்கள பொலிஸ் அதிகாரிகள் வந்து பொதுமக்களுடன் பேச்சில் ஈடுபட்டனர். எனினும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பெருமளவு பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து, விசாரணைகளை மேற்கொண்டு, பொது மக்களை சமரசம் செய்து வைத்ததனர். பொலிஸாரின் தலையீட்டை அடுத்து இரண்டரை மணி நேர இழுபறி முடிவுக்கு வந்தது. (ம-3)

## யாழ்ப்பாணம்...

மக்கள் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் நாவலர் வீதியில் பொருளியல் கல்லூரிக்கு முன்பாகவுள்ள உணவகத்தின் உரிமையாளரான நிசாந்தன் (வயது-31) என்ற ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## படுகாயமடைந்த...

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்து சம்பவம் ஒன்றில் இளம் குடும்பஸ்தரான அரசரத்தினம் திவாகர் (வயது-39) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று புதன்கிழமை காலை மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,60)

## கடற் பிரதேசத்...

திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

குறித்த பகுதிகளில் இரவு வேளையில் மழை பெய்யக் கூடும்.

அவ்வாறு மழைபெய்யும் சந் தர்ப்பங்களில் காற்று மேலும் அதிகரித்து வீசக்கூடும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக குறித்த கடற்பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபடுவோர் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கோரப்பட்டுள்ளனர். (ம-3)

## ஜனாதிபதித் தேர்...

தொடர்பில் ஆராய்ந்து வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் பிரசாரங்கள் நிறைவு பெற்ற பின்னர் சமூக வலைத்தளங்களில் உள்ள விளம்பரங்களை அகற்றுமாறு அறிவுறுத்தினார்.

கட்அவுட்-களை அகற்றுங்கள். இன்று காலை வரை அலுவலகங்களை வைத்திருக்க முடியும்.

ஒரு தொகுதியில் ஒரு அலுவலகத்தை வைத்திருக்க முடியும். 500 மீற்றருக்கு அருகில் வாக்களிப்பு நிலையம் ஒன்று இருந்தால் அலுவலகத்தை அகற்ற வேண்டும். அரச வாகனங்களை மறைத்து வைத்திருந்தால் ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் 3 வருட சிறைத் தண்டனையும் வழங்கப்படும் என மகிந்த தேசப்பிரிய மேலும் கூறினார். (ம-3)

## விக்னேஸ்வரனை..

ருந்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த கூட்டத்தை சீ.வீ.கே. சிவஞானம் தலைமையேற்று நடத்திய நிலையில் தலைமையாக சி.வி.விக்னேஸ்வரனை விழித்தமை பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது. (ம-3,10)

## பொது இடங்...

காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை மறுதினம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக சுமார் 4000 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 3000 பேர் வாக்கு எண்ணிக்கை இடம்பெறும் நிலையங்களில் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

225 நடமாடும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் பெருந்தோட்ட மற்றும் வடக்கு கிழக்கிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கிணங்க அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் செயற்படும் என நம்புகின்றோம். இது தொடர்பில் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்துவது சிரமமான பணியாகும். இருப்பினும் பப்ரல் அமைப்பு சமூக ஊடக நிர்வாகிகளுக்கு இது தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளது.

ஒவ்வொரு இரண்டு மணித்தியாலத்திற்கும் சமூக ஊடக நிர்வாகிகள் சமூக ஊடகங்களின் தேர்தல் செயற்பாடு பற்றி எமக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அவ்வறிக்கையை நாம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கவுள்ளோம். அவ்வறிக்கை தொடர்பில் ஆணைக்குழு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

இதுவரை சமூக ஊடகங்களில் தேர்தல் தொடர்பில் 156 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 85 முறைப்பாடுகளை சமூக ஊடக நிர்வாகிக்கு தெரிவித்துள்ளோம். இது தொடர்பில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இந்த விடயம் சம்பந்தமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

மதத்தலங்கள் தேர்தல் தொடர்பில் நடுநிலை வகித்து செயற்பட வேண்டும். விகாரைகளில் எந்தக் கட்சிகள் சார்பிலும் விசேட பூசைகள் எதுவும் நடத்த கூடாது என்று வேண்டிக் கொள்கின்றோம்.

வாக்காளர்கள் தற்காலிக அடையாள அட்டை உட்பட 6 விதமான அடையாள அட்டைகளை பயன்படுத்த முடியும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்குரிமையை உறுதிப்படுத்தக் கூடிய அனைவரும் கட்டாயம் வாக்களிக்கவும்.

இம்முறை வேட்பாளர்களின் தொகை அதிகம் என்பதனால் வாக்குச் சீட்டின் நீளமும் அதிகரித்துள்ளது. அனைத்து வாக்காளர்களும் காலையிலேயே சென்று வாக்களிப்பது சிறந்தது.

இம்முறை வாக்குச்சீட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் அவர்களுக்கு வாக்களிப்பதில் சிரமம் ஏற்படும். இதனால் வாக்களிப்பு நிலையங்களில் நெரிசல்களும் ஏற்படலாம்.

அவர்களுக்கு வாக்களிப்பதற்கான விடுமுறையை வழங்கவேண்டும். இல்லை என்றால் அவர்களுக்கு வாக்களிக்க முடியாமல் போகும். இவ்வாறு அவதானமின்றி செயற்படும் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (ம-3)

## கண்ணிவெடி...

ணைக்காக புல்மோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக புல்மோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## செய்தியை திரிபு...

சுமந்திரன்.

அண்மையில் மாங்குளத்தில் நடந்த பிரசார கூட்டத்தில், சிங்களவர்களை தோற்கடிக்க மாத்திரமே சஜித்தை ஆதரிப்பதாக சுமந்திரன் உரையாற்றியதாக நேற்று முன்தினம் அருண பத்திரிகை செய்தி வெளியிட்டது. இதை சுமந்திரன் மறுத்திருந்தார். அத்துடன், செய்திகளின் உண்மைத்தன்மையை ஆராயும் அமைப்பொன்றும் இது போலியான செய்தியென அறிக்கையிட்டிருந்தது.

இந்தநிலையில், கோத்தாவின் ஆதரவு பத்திரிகைகளான சிலோன் ருலோ, மவ்பிம ஆகியன நேற்று அதே செய்தியை பிரசுரித்திருந்தன.

இது குறித்து நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும், பதில் பொலிஸ்மா அதிபரிடமும் முறையிட்டிருந்தார். இனங்களிற்கிடையில் குரோதம் ஏற்படுத்தவதாக குறிப்பிட்டு, பத்திரிகை ஆசிரியர்களையும் தொடர்புடையடைய செய்தியாளர்களையும் கைது செய்ய வலியுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து மூன்று பத்திரிகைகள் மீதும் ரூபாய் 1000 கோடி இழப்பீடு கோரி சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பி வைத்துள்ளார். (ம-3)

## அரசியல் விளம்ப...

முதல் தேர்தல் பிரசாரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில், வேட்பாளர்களுக்கான பிரசாரம் பேஸ்புக்கில் முன்னெடுக்கப்படுவதை தடுக்கும் வகையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பப்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பிரசாரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில், சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் அரசியல் விளம்பரங்கள், வாக்காளர்களின் சுயாதீன தீர்மானங்களில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)

### பிரசாரத்தில் குழப்பம்

# நல்லூரில் ஒருவர் கைது

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நேற்று புதன்கிழமை மாலை நல்லூர் கிட்டுப் பூங்காவில் இந்தப் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்திற்கு வந்த நபர் ஒருவர் தகாத வார்த்தைகளை பேசி அங்கிருந்தவர்களை முகம் சுளிக்க வைத்தார். அவருடைய அநாகரிக செயற்பாட்டை அடுத்து அங்கிருந்த பொலிஸார் அவரை எச்சரித்தனர்.

உடனடியாக அவரை கைது செய்த பொலிஸார் அவரின் மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (ம-3)


ராசி அதிர்ஷ்டம்
திகதி 13/11/2019 | வெற்றி வாரம் 2677 | வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: மேஷம் 23 34 51 58
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,459,298
2019/11/14 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 296
சீட்டிழுப்பு திகதி 13.11.2019 நீலம்
ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கங்கள் 32 35 53 | விதி எண் 6
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 46,864,472
2019.11.15 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 791
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.11.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,987,155/-
வெற்றி இலக்கங்கள் 16 63 64 77 | ஆங்கில எழுத்து J

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3261 திகதி: 2019.11.13
வெற்றி இலக்கங்கள் 20 53 68 73 | ஆங்கில எழுத்து L
சுப்பர் இலக்கம் 3129
அடுத்த ஜக்பொட் பரிசு 70,223,990/-

என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா
தன நிதானய
திகதி - 2019.11.13
சீட்டிழுப்பு இலக்கம் - 226
K 03 33 35 42
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 13-11-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2300
ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கங்கள் 05 11 46 48
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13.11.2019
சீட்டிழுப்பு இலக்கம் 0991
ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கங்கள் 2 3 0 0 2 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/11/13
சீட்டிழுப்பு இலக்கம் 0458
T 20 19 61 65 67

# மைத்திரிபால சிறிசேன மட்டுமே நாட்டின் முன்மாதிரிமிக்க தலைவர்

## மகாசங்கத்தினர் பாராட்டு

(கொழும்பு)

தூர நோக்குடன் செயற்படும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் முன்மாதிரிமிக்க ஜனாதிபதி என்று மகாசங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

திரிபீடகத்தை உலக நினைவுப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கான விண்ணப்பத்தை தயாரிக்கும் நிபுணர் குழு, திரிபீடகத்தை பேணிப் பாதுகாக்கும் சபை, பௌத்த ஆலோசனை சபை, பௌத்த புலமைத்துவ சபை, அகில இலங்கை சாசன பாதுகாப்புச் சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் மகாசங்கத்தினருக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப் பின்போதே மகாசங்கத்தினர் இதனை தெரிவித்தனர்.

திரிபீடகத்தை தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்தி அதனை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை நாட்டின் பௌத்த சாசனத்திற்காக ஜனாதிபதி மேற்கொண்ட ஒரு முக்கியமான பணி எனத் தெரிவித்த மகாசங்கத்தினர், நாட்டின் பிரிவெனா கல்வியை மேம்படுத்துவதற்கும் ஜனாதிபதி முன்னெப்போதும் இல்லாத வகையில் பல பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

மேலும் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் உள்ள குறைந்த வசதிகளையுடைய விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கும், அவற்றில் உள்ள பிக்குமார்களின் நலன்பேணலுக்காகவும் ஜனாதிபதி கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் விரிவான பல நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்ததாகவும் தேரர்கள் குறிப்பிட்டனர்.

அகில இலங்கை சாசன பாதுகாப்பு சபைக்கு ஜனாதிபதியினால் 100 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது. (ம-3)

### தேர்தல் சட்டவிதிகளை மீறிய

# 4 ஊடகங்களிற்கு தேர்தல் முடிவுகள் வழங்கப்படாது

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்பட்ட 4 ஊடகங்களிற்கு தேர்தல் முடிவுகள் வழங்கப்படாது என அறிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர்.

அரச ஊடகங்களான இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி சேவை மற்றும் தனியார் ஊடகங்களான ஹிரு, தெரண ஆகியவவை தேர்தல் விதிகளை மீறி, வேட்பாளர் களை ஆதரித்திருந்தன. அரச ஊடகங்கள் இரண்டும் சஜித் பிரேமதாசவையும், தனியார் ஊடகங்கள் இரண்டும் கோத்தபாய ராஜபக்ஷவையும் ஆதரித்திருந்தன.

இதையடுத்து, இந்த நான்கு ஊடகங்களிற்கும் தேர்தல் முடிவுகளை வழங்குவதில்லையென அதிரடி முடிவெடுத்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர். நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார். (ம-3)

### டெங்கு பரவும் அபாயம்

# வவு.இறம்பைக்குளம் மகளிர் கல்லூரிக்கு இன்று விடுமுறை

(வவுனியா)

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி இன்று மூடப்படவுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த பாடசாலையில் சில மாணவர்களுக்கு டெங்கு காய்ச்சல் உள்ளமை கண்டறியப்பட்டது. இதன் பிரகாரம் சுகாதார திணைக்களத்தினால் பாடசாலை சூழல் அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில் பாடசாலையில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் சுகாதார பகுதியினரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனவே அவற்றை சுத்தம் செய்து குறித்த சூழலை டெங்கற்ற பிரதேசமாக மாற்ற சுகாதார செயற்பாடுகளை நடைமுறைப் படுத்த வேண்டியுள்ளதாகல் இன்று மட்டும் பாடசாலையை மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாகாண மட்டத்தில் இடம்பெறும் சாதாரணதர பரீட்சைக்கான முன்னோடி பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபங்களில் தோற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ம-3,250,299)

### ஜனாதிபதி மைத்திரி வழங்கிய

# பொது மன்னிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

றோயல் பார்க் கொலை சம்பவத்தின் குற்றவாளிக்கு ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார். இந்நிலையில் இதற்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் நேற்று புதனகிழமை நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யவுள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டு ராஜகிரியவில் உள்ள றோயல் பார்க் வீட்டு வளாகத்தில், யுவோன் ஜோன்சன் என்ற 19 வயதான சுவீடன்-இலங்கை வம்சாவளி யுவதியொருவர் றோயல் பார்க் என்ற அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து கீழே தள்ளப்பட்டு கொல்லப்பட்டார்.

குறித்த கொலைச் சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஸ்ரீமந்த ஜெயமஹவ என்பவரை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பாக பல்வேறு விமர்சனங்களுக்கு ஜனாதிபதி உள்ளாகியுள்ள நிலையில், இந்த விடுவிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. .(ம-3)

### ஜனாதிபதி வேட்பாளர்களை

# இன்று சந்திக்கும் மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற 35 வேட்பாளர்களையும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய சந்திக்கவுள்ளார்.


அதற்கமைய இன்று வியாழக்கிழமை இடம்பெறும் இந்த சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு அவர்கள் அனைவருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவுகள், வாக்கு எண்ணும் பணிகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடும் பணிகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டால், அவர் களது பிரதிநிதிகள் இருவர் கலந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை செல்வநாயகம்



வாதரவத்தையை பிறப்பிடமாகவும் அத்தியடி மற்றும் கட்டப்பிராயை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை செல்வநாயகம் நேற்று முன்தினம் 12.11.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - பளவம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாலசறோசினியின் அன்பு கணவரும் ரேணுகாதேவன் (பிரான்ஸ்), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாந்தகுமார் (கரிதாஸ் கியுடெக்), சிவதர்சினி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான புஸ்பரத்தினம், நேசம்மா, கந்தசாமி, சுப்பிரமணியம், சிவநேசம் மற்றும் பத்மலோஜினி ஆகியோரின் அன்பு சகோதரரும், செல்வநாயகி, காலஞ்சென்றவர்களான சிவபாலசிங்கம், தேவராணி மற்றும் இந்திராணி, சண்முகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற விக்னேஸ்வரராஜா மற்றும் கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிஷாந் (ASE), கஜலக்ஷன் (பிரான்ஸ்), தீபிகா (மொறட்டுவ பல்கலைக்கழகம்), ரிஷி (பிரான்ஸ்), கஷினி (பிரான்ஸ்), கைஸ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30/22, அத்தியடி குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
021 222 8337

(C-8224)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி
V2 TRAVELS
(C-8115)

றொமானியா
வேலைவாய்ப்பு

JCB/Excavator Opertaor
Electrician, தச்சுவேலையாள்
மேசன்/உதவியாளர், வெல்டர்
களஞ்சியப் பணியாளர்
தையல்மெஷின் ஒப்பறேட்டர்
மெக்கானிக்
மற்றும் வீதிக் கட்டுமானப்பணி
அனுபவமுள்ளவர்கள்
உணவு, தங்குமிடம் மருத்துவ வசதிகள் இலவசம்!
சம்பளம் 600 - 1,100 US$ 99,500 - 199,100
விசா – டிக்கட் கிடைத்த பின்னரே கட்டண அறவீடு!
3 அணிகள் பயணமாகின! அடுத்த அணியில் நீங்களும் இணைய...
077 00 38 215, 077 55 46 956, 021 221 9 221
எமரல்ட் ஐல் 221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
License No. 2268
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(C-8224)

வீட்டுப் பணிப்பெண் தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு 35 - 55 இற்கு இடைப்பட்ட வயதுள்ள பணிப்பெண் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். வேலை நேரம் : காலை 8.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை (வீட்டில் தங்கி நின்று வேலை செய்வது தவிர்க்கப்படும்.
தொடர்பு :- 077 746 7639
(C-8222)

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-8109)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.